₹10

fmpb

Volume 53

Issue 8

August 2023

# அறைகூவல்




2023-ம் ஆண்டின் நோக்கம்

## கனிகொடுக்க தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

*நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை,
நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்;
... அதை அவர் உங்களுக்குக்
கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க்
கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி
நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை
ஏற்படுத்தினேன். யோவான் 15:16*

# ஆரம்ப வரிகள்...

## கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்போம்.



விசுவாச வாழ்வின் ஆணிவேர் கிறிஸ்துவாக இருந்தால் அதின் கனி கிறிஸ்துவின் குணாதிசயமாக வெளிப்படும். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை உலகமெங்கும் போகும்படியாகவும், தமக்குச் சாட்சிகளாய் இருந்து கனிகொடுக்கவும் கட்டளையிட்டார். யோவான் 15:16-ல் “நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்... நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்” என்று எழுதப்பட்டிருக்கிறது. நம் வாழ்வு கனி நிறைந்த வாழ்வாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கனி மட்டுமல்ல வேரும் மிக அவசியமாகும். உங்கள் வேர் எவ்வளவு ஆழமாக உள்ளது? எவ்வளவு பெரிய மரம் அல்லது செடியாக இருந்தாலும் அதன் வாழ்வு சிறிய விதையில்தான் ஆரம்பமாகிறது. இந்தச் சிறிய விதை மண்ணிற்கு அடியில் பல மாற்றங்களை அடைந்து, அதன் பின் மண்ணில் புதைந்திருக்கும் விதையில் இருந்து முதன்முதலில் தரையை நோக்கி அதாவது கீழ்நோக்கி வளர்வது வேர் ஆகும். அதன்பின்புதான் தண்டு, இலைகள் போன்றவை மேல் நோக்கி வளரும். கீழ்நோக்கி வளராத எந்தச் செடியும் மரமும் மேல் நோக்கி வளராது. கனியும் கொடுக்க முடியாது. ஒரு மரம் என்றால், அது நமக்கு கனிகொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்போம். அது மிகுந்த கனி கொடுக்கவேண்டுமென்றால், அந்த மரத்தின் வேர் தண்ணீரண்டையிலும், ஆழமாகவும் இருக்கவேண்டும்.

ஆவியின் வரங்கள் வேறு, ஆவியின் கனிகள் வேறு, ஆவியின் வரங்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுபவை. ஆனால் ஆவியின் கனியோ நம்மால் விளைவிக்கப்பட வேண்டியவை. இது ஒரே நாளில் நடைபெறும் அனுபவம் அல்ல. மாறாக, இது அனுதினமும் நமது நடைமுறை வாழ்வில் நடைபெறும் ஒரு தொடர் நிகழ்வேயாகும். வேத வசனம் என்னும் விதையும், தண்ணீரின் அண்டையில் வளரும் மரமும் போல நாம் நம்வாழ்வில் வளர ஆவியானவரின் அருள் மாரி மழை நமக்குத் தேவை. அப்பொழுதுதான் வேத வசனம் கீழ்நோக்கி வேரூன்றி, கனிகொடுக்கும் வாழ்வு மேல்நோக்கி வளர உதவும் (2 இரா.19:30). கர்த்தர் இயேசுவில் வேரூன்றி இருப்போமானால் நாம் எதிர்கொள்ளும் எல்லா காரியங்களின் மத்தியிலும் மிகுந்த கனி கொடுக்கிறவர்களாய் இருப்போம். கனியற்ற வாழ்வை வாழுவோமானால், தோட்டக்காரரான இயேசு கிறிஸ்து கனி கொடாத மரங்களையெல்லாம் வெட்டுவதற்கு கோடாரியை வேரருகே ஆயத்தமாக வைத்திருக்கிறார் (மத்.3:10).

எந்த ஒரு கனியும் தனக்காக அல்ல, பிறருக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது. நமது வேர் எவ்வளவு ஆழமாக சென்றிருக்கிறது? எப்படிப்பட்ட கனிகளை நாம் கொடுக்கிறோம்? என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நம் மூலமாக கிறிஸ்துவண்டை வந்து சேரும் புதிய ஆத்துமாக்களும் தேவன் விரும்பும் கனி, அப்பேற்பட்ட கனி நிறைந்த வாழ்வு வாழ்ந்திடவும், அநேகரை இயேசுவண்டை நடத்திடவும் இம்மாத இதழ் உங்களுக்கு உதவும் என விசுவாசிக்கிறோம். ஜெபத்துடன் வேதம் வாசித்து தேவனுக்காய் கனி கொடுப்போம், மற்றவர்களை கனி கொடுக்கச்செய்வோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே நமது கனி நிறை வாழ்வில் பிரியப்படுவாராக, ஆமென்.

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்.**
*கொலோசெயர் 1:10*

**அதிக கனிகளைத் தரும் கிளைகள் பாதுகாக்கப்படுவதுமில்லை, பராமரிக்கப்படுவதுமில்லை, அநேகர் கண்டு ரசிக்கும் தூசி அண்டாத காட்சி பெட்டிகளில் வைப்பதும் இல்லை மாறாக அவைகள் கிளை நறுக்கப்பட்டு, சேதமாக்கப் படுகின்றன என்ற உண்மை எவ்வளவு சுவாரஸ்யமாக உள்ளன அல்லவா? ஏன் என்றால் அவை மிகுந்த கனி கொடுக்க வேண்டும்.** – *ஜெனிஃபர் கென்னடி.*

**நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.**
*மத்தேயு 7:19,20*

**தேவனின் கிருபை என்னும் தோட்டத்தில் உடைந்த மரங்களாலும் கனிகொடுக்க முடியும்** – *ரிக் வாரன்.*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*



**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...



ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்திய ரனைவரும் அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு, சர்வ வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் நல்வாழ்த்துக்கள்!

நான் இந்த மாதம் இதழை குஜராத் மாநிலத்தில் இருந்து எழுதுகிறேன். காணாமல் போன ஆடுகளைப் பற்றிய உவமையில், மேய்ப்பன் 99 ஆடுகளை விட்டு விட்டு, காணாமற்போன ஒரு ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரை அதை பின் தொடர்ந்தான் என்று இயேசு கூறினார். (லூக்கா 15:4) உவமை நாம் ஒவ்வொருவரின் இந்த பொறுப்பை நினைப்பூட்டுகிறது. தனித்தனி நபர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த கிறிஸ்தவ திருச் சபைகளுக்கும் நினைப்பூட்டுகிறது. ஆனால் இன்று நம்மிடம் 3 ஆடுகள் மட்டுமே உள்ளது. 97 ஆடுகளை இழந்த நிலைமை யாக மாறிக் கொண்டிருக்கிறது. மேய்ப்பன் கையில் உள்ள 99 ஆடுகளைக் காட்டிலும் அந்த ஒரு ஆட்டின் மேல் விசேஷித்த அக்கறைகொண்டிருந்தான். ஆனால் இன்று நம்மிடம் உள்ள அந்த 3 ஆடுகளைப் பற்றி அதிக கவனம் செலுத்தி, 97 ஆடுகளைப் பற்றி கவலைப்படவில்லை. அந்த 97 ஆடுகளும் பல அடிமைத்தனங்களில் சிக்கி, யாரேனும் அவர்களை விடுவிக்க மாட்டார்களா? எனக் காத்திருக்கின்றார்கள். இவர்களுக்காக பாரப்பட, புறப்பட, ஜெபித்து ஜெயித்துவிட நம் அனைவரின் உணர்வற்ற இதயத்தைத் தட்டி எழுப்பட்டும்.

**CSI - மிஷனரிகளின் கூட்டம்:** ஜூன் 21-ம் தேதி CSI மிஷனரிகளிடம் பேச அழைக்கப்பட்டேன். CSI சினாட்டின் மிஷன் துறையில் சென்னையில் ‘‘தனி நபர் மிஷனரி” என்ற தலைப்பில் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**CNI - குஜராத் மறைமாவட்ட பேராயருடன் சந்திப்பு:** நமது இயக்கத்தின் தலைவருடன், நானும் விரிவுப்பணி மற்றும் பணித்தள தலைவர்களுடன் சேர்ந்து CNI குஜராத் மறைமாவட்ட பேராயர் CNI சில்வான்ஸ் கிறிஸ்டியான் மற்றும் மறைமாவட்ட தலைவர்களை ஜூன் 27-ம் தேதி சந்தித்தோம். பேராயர் எங்களை அன்புடன் வரவேற்று, மறைமாவட்டத்திற்கும் FMPB-க்கும் இடையிலான உறவு மேலும் வலுவடைய தேவன் உதவினார். அவர் எங்கள் கோரிக்கைகளை மனதார ஏற்றுக்கொண்டு செப்டம்பர் மாதம் 2-ம் தேதி, நேத்ரங்கிலுள்ள ஃபோக்டி பணித்தளத்தில் 30 மிஷனரிகள் மற்றும் சுதேச ஊழியர்களை உதவி போதகர்களாக நியமிக்க முடிவு செய்துள்ளோம். CNI திருச்சபை தலைவர்களின் ஆதரவு நமக்கு ஊழியங்களில் மிகவும் ஊக்க மளிக்கிறது, மற்றும் நம் தேசம் சந்திக்கப் படும் சுவிசேஷப்பணிக்கு மிகவும் உதவு கரமாக இருக்கிறது.

**முழுநேர ஊழியர்கள் நேர்காணல்:** தேசமெங்கும் தேவப்பணியை நிறைவேற்ற புதிய மிஷனரிகளை தேர்ந்தெடுப்பதற்கான நேர்காணல் ஜூன் 30-ம் தேதி தலைமை யகத்தில் வைத்து நடைபெற்றது. அதில் மொத்தம் 27 பேர் கலந்துகொண்டு, 20 பேர் தேர்வு செய்யப்பட்டனர், அவர்களில் இறுதியில் 18 புதிய மிஷனரிகளைத் தேர்வு செய்துள்ளோம். இவர்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஒரு மாதக்காலம் விரிவுப்பணியிலும், ஒரு மாதக்காலம் பணித்தள அனுபவங்களையும் பெறுவார்கள். FMPB குடும்பத்தில் புதிதாக இணைந்திருக்கும் மிஷனரிகளுக்காக மறவாமல் ஜெபியுங்கள்.

**டிவிஷனல் பிரிவு செயலர்களுடன் ஜெபமும் திட்டமிடுதலும்:** நமது இயக்கத்தின் டிவிஷனல் பிரிவு செயலர்களுடன் கடந்த ஜுலை மாதம் 3, 4 ஆகிய தேதிகளில் தேசத்திற்காக ஜெபத்தில் தரித்திருந்தோம். தேவன் எங்கள் இதயங்களில் புத்துணர்ச்சியூட்டி, தேசத்தை சந்திக்க புது பெலனையும், அடுத்த இரண்டு நாட்களில் ஊழியத்திற்கான திட்டமிடலையும் தேவ ஒத்தாசையோடு செய்தோம்.

**அகில இந்திய கிதியோன் ஊழிய வருடாந்திர மாநாடு:** கரூரில் ஜுலை மாதம் 7, 8 தேதியில் நடைப்பெற்ற கிதியோன் 6-வது தமிழ் மாநாட்டில், வேதாகம வகுப்பில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொள்ள உதவி செய்தார். என்னை ஜெபத்தில் தாங்கின அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மதுரைக் கூடுகைகள்:** ஜுலை மாதம் 9-ம் தேதி, மதுரை கிழக்கு வாசல் CSI தேவாலயத்தில் காலை மிஷனரி அர்ப்பணிப்பு ஆராதனையில் தேவ செய்தி கொடுக்கவும், மாலையில் LPN பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த SCAN குடும்பக்கூடுகையில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக்கொள்ள உதவினார். அந்த கூடுகை நடந்த இடத்தைச் சுற்றிலும் சுமார் 200 மீட்டர் வரை பலத்த மழை பெய்தாலும், அந்தக் கூடுகை நடந்த மைதானத்தில் மட்டும் சிறிய தூறல் மட்டும் இருந்தது எந்த ஒரு இடையூறும் இல்லாமல் தொடர்ந்து கூடுகை நடந்து முடிந்தது. இயற்கையைக் கட்டுப்படுத்திய தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**விரிவுப்பணி மண்டல செயலர்கள் சந்திப்பு:** தமிழ்நாடு, பாண்டி விரிவுப்பணி மண்டலச் செயலர்கள் கூடுகை புதிதாக நியமிக்கப்பட்டுள்ள டிவிஷனல் செயலரான அருட்திரு. R. டேனியல் தாமஸ் தலைமையில் முதல் கூடுகை ஜுலை 10-ம் தேதி சென்னையில் வைத்து ஆசீர்வாதமாக நடைபெற்றது.

**புதிய மிஷனரிகளின் இயக்கத்தின் நோக்குநிலைக் கூடுகை:** புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மிஷனரிகளுக்கான இயக்கத்தின் நோக்குநிலை வழிகாட்டுதல் நிகழ்ச்சி ஜுலை 6 முதல் 11 வரை தலைமையகத்தில் மனிதவள மேம்பாட்டுத்துறையினால் சிறப்பாக நடத்தப்பட்டது. மூத்த மிஷனரிகள் வெவ்வேறு தலைப்புகளில் தேசத்தின் தரிசனத்தைக் போதித்தனர். 10-ம் தேதி இரண்டு தலைப்புகளில் நானும் பகிர்ந்துக்கொள்ள தேவன் உதவி செய்தார்.

**குஜராத் பணித்தள விஜயம்:** ஜுலை 12-18 தேதி வரை பணித்தளச் செயலருடன் ஆரவல்லி, சாத்புரா, சஹ்யாத்ரி, கோதாவரி மண்டலங்களையும், ஜாவ்டா ஆங்கிலப் பள்ளி, பெயின்ட் பகுதிகளுக்கு விஜயம் செய்தோம். அங்குள்ள மிஷனரிகளுடன் பிராந்திய வாரியான கூட்டங்களை அவர்கள் வீடுகளில் வைத்து நடத்தி, தேவனின் அழைப்பை நிறைவேற்றுவதிலும் ஆழ்ந்த அர்ப்பணிப்பையும் பார்த்தபொழுது தனிப்பட்ட முறையில் எனக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

## ஜெபத்திற்கான கரிசனைகள்:

**ஆலப்பள்ளியில் நடைபெறும் மண்டலச் செயலர்கள் கூடுகை:** பணித்தள மண்டலச் செயலர்களுடன் ஆகஸ்டு முதல் வாரத்தில் 2 நாட்கள் ஜெபமும், 2 நாட்கள் திட்டமிடுதலும் நடைபெறவுள்ளது.

**FMPB புரொஃபேஷனல் ஃபோரம் கார்னிவல், பெங்களூரு:** மால்தோ குழந்தைகளின் கல்விக்கான ஆதரவை உயர்த்துவதற்காக ஆண்டுதோறும் FMPB-ன் பெங்களூரு நிபுணத்துவ பிரிவு நடத்தும் கார்னிவெல் ஆகஸ்டு 6-ம் தேதி நடைபெறவுள்ளது. இக்கூடுகைகளுக்காகவும், அதன் நோக்கம் நிறைவேறவும் ஜெபிப்போம்.

**ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கார் பணித்தள விஜயம்:** ஆகஸ்டு இரண்டாம் வாரத்தில் ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கார் மாநிலத்தில் சில பணித்தளங்களை பார்வையிட திட்டமிட்டுள்ளேன். எங்களது பயணங்களில் தேவ கிருபைகளுக்காகவும், மிஷனரிகளுடனான சந்திப்புக்களுக்காகவும் ஜெபிப்போம்.

**தேசிய ஊழிய ஆலோசனைக் கூடுகை - ஏலகிரி:** தேசிய அளவிலான மிஷன் ஆலோசனைக் கூட்டம் ஆகஸ்டு 16-19 வரை சில மிஷன் தலைவர்களுடன் இணைந்து நடைபெறவுள்ளது.

**கலாச்சாரம் கடந்த தொலைத் தொடர்பு பயிற்சி:** மத்திய மண்டல மிஷனரிகளுக்கான கலாச்சாரம் கடந்த தொலைத் தொடர்பு பயிற்சி ஆகஸ்டு 21- 25 வரை நந்தூர்பாரில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி மூலம் சுவிசேஷ ஊழியத்தில் நல்ல ஒரு மாற்றத்தை காண ஜெபிப்போம்.

**தேசிய தலைமைத்துவ மாநாடு - நாக்பூர்:** தேசிய தலைமைத்துவ மாநாடு ஆகஸ்டு - 28-31-ம் தேதி வரை நடைபெற உள்ளது. தேவனின் வழிகாட்டுதலுக்காகவும், கூடிவரும் அனைவருக்காகவும் ஜெபிப்போம். உங்களின் உதாரத்துவமான ஜெபங்களுக்காகவும், ஆதரவிற்காகவும் நன்றி செலுத்துகிறேன். ஒரு நாளில் ஒரு முறையாவது மிஷனரிகளுக்காக ஜெபித்திட பட்சமாய் வேண்டிக்கொள்கிறேன்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

## மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்...

ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள பெல்டிஹோ பணித்தளத்தில் ஊழியம் செய்யும் ரமேஷ் வேல்ராஜ் அவர்கள், கடந்த ஜூன் 2-ம் தேதி காலை 4 மணி அளவில் தன்னுடைய சொந்த ஊருக்கு ரெயிலில் பயனிக்க வீட்டை விட்டு வெளியே வந்தபோது, தான் ஜெபித்தோமா? இல்லையா? என்ற சந்தேகம் இருந்ததால் மறுபடியும் வீட்டிற்குள்போய் ஜெபித்துவிட்டு ரெயில் ஏறினார். அதே வேளையில் அவரின் மனைவி பிரிசில்லாள் அவர்களையும் ஜெபிக்கும்படி தேவன் தூண்டியதால் அவர்கள் மாடியில் போய் ஜெபித்தார்கள். ஏனென்றால் அவரின் கணவர் மே 31-ம் தேதியிலிருந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்கள். மாலை 3.20 மணி அளவில் கோரமண்டல் எக்ஸ்பிரஸ், ஷாலிமார் ரெயில் நிலையிலிருந்து கிளம்பியது. 6.30 மணிக்கு ஒரிசாவிலுள்ள பாலசோர் நிலையத்தை அடைந்தது. 7 மணி அளவில் திடீரென முழு ரெயிலும் குலுங்க ஆரம்பித்தது. அநேகர் தங்கள் இருக்கைகளிலிருந்து விழ ஆரம்பித்தனர். அழுகை சத்தம் கேட்க தொடங்கியதும் ரெயிலும் நின்றது. ஊழியரோடு பெட்டியில் இருந்தவர்கள் சிறு விபத்து ஏதோ நடந்தது என்று எண்ணினர். அவர்கள் வெளியே சென்று பார்த்தபோது 5 பெட்டிகளை தவிர மற்ற எல்லா பெட்டிகளும் உருக்குலைந்து போயிருந்தது. அநேகர் காயங்களுடனும் பலர் சடலங்களாக கிடப்பதைக் கண்டு அதிர்ந்து போனர்கள். ஊழியர் அழுது கொண்டிருப்போருக்கு ஆறுதலையும் முடிந்த உதவிகளையும் செய்ய ஆரம்பித்தார். அவரை சுற்றி மரண ஓலத்தைக் கண்ட அவர் அவரின் ஜீவனை காப்பாற்றியதற்காய் தேவனைத் துதித்தார். தேவன் அவரிடம் சங்.23:4 நினைவுப்படுதினார். அருகில் இருந்த புவனேஷ்வர் சென்று பேருந்தில் ஏறி அங்கிருந்து கடந்துச் சென்றார். அவர் ஜீவனோடு இருப்பது தேவனின் சுத்த கிருபை அல்லேலூயா!



# கனிகொடுக்கத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

எளிய குடும்பம், வறுமை, படிப்பில் தோல்வி... குடும்பத்தைக் கவனிக்க 14 வயதில் படிப்பை விட்டு விட்டு, பெட்டிக்கடை, வீடுகளில் பணிப்பெண் வேலை... அன்பு காட்ட, அரவணைக்க, ஆதரவுக் கரம் நீட்ட ஆட்களில்லாத நிலை இத்தகைய தடுமாற்றத்துடன் துவங்கின வாழ்வின் சொந்தக்காரர்தான் இங்கிலாந்தின் லண்டன் மாநகரில் வாழ்ந்த கிளாடிஸ் அயில்வார்டு. பின் நாளில் செய்தித்தாளிலும், வானொலியிலும் பேசப்படும் நபரானார் என்றால் சாத்தியம் தானா? ''சிறிய பெண்மணி'' என்னும் திரைப்படம் அவளுடைய வாழ்வை மையமாக வைத்து எடுக்கப்பட்டது என்றால் நம்ப முடிகிறதா? ஏன் இங்கிலாந்து அரசி எலிசபெத் அவர்களால் அரசு விருதையும், அவருடன் விருந்து உண்ணும் வாய்ப்பையும் பெற்றார் என்பது பிரமிக்க வைக்கிறதா?

பிரியமானவர்களே! ஒரே ஒரு வார்த்தை ''தேவனுக்கு நீ தேவை'' இவைதான் கிளாடிஸ்ஸை புரட்டிப் போட்ட போதகரின் வார்த்தைகள். அர்ப்பணித்தாள், அசைந்தது சீன தேசம். சரித்திரம் சொல்லுகிறது எந்த தகுதியும், தாலந்தும், படிப்பும் இல்லாத கிளாடிஸ் தன்னை ஊழியராக அர்ப்பணித்ததின் விளைவு ஒரு கனிதரும் நபராக காலத்தால் அழியாத கனமான ஊழியத்தை சீன தேசத்தில் நிறைவேற்றினார் என்று... அன்பானவர்களே! நம்மையும் தேவன் அவருக்காகக் கனி கொடுக்க அழைக்கிறார். யோவான் 15:16-ல் ''கனி கொடுத்தல்'' என்பது ஆண்டவருக்கும், மற்றவர்களுக்கும் பயனுள்ள வாழ்க்கை வாழ்வது. அதற்குத்தான் உங்களை ஏற்படுத்தினேன் (தெரிந்து கொண்டேன்) என்கிறார்.

யோவான் 15-ம் அதிகாரத்தில் கனிகொடுக்க யோவான் சில பதங்களைப் பயன்படுத்துகிறார்.

வசனம் 2- அதிக கனிகொடுக்க (more fruit)

வசனம் 5 - மிகுந்த கனிகளைக் கொடுக்க (much fruit)

வசனம் 16 - நிலைத்திருக்கும் கனியைக் கொடுக்க வேண்டும் என்கிறார்.

இவ்விதம் கனிகொடுக்க வேண்டுமானால் நம்மைத் தெரிந்துகொண்டவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேதத்தில் ஒரு நபரை முன்னிலைப்படுத்த விரும்புகிறேன்.

யோவான் 4-ம் அதிகாரத்தில் எல்லோராலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட பெண் தள்ளி வைக்கப்பட்டவள், பாவத்தில் வாழ்ந்தவள், ஏளனம், அவமானம், பழிச்சொல் இவற்றிற்கு எல்லாம் அஞ்சி கொளுத்தும் வெயிலில், யாருமே இல்லாத நேரத்தில் தண்ணீர் எடுக்க வந்த, பெயர் கூட குறிப்பிடாத சமாரியப் பெண்.

வீடுகட்டுகிறவர்களால் ஆகாதென்று தள்ளப்பட்ட கல்லை மூலைக்குத் தலைக் கல்லாக்குகிற கிறிஸ்து அவளைச் சந்திக்கிறார். அவள் அவரிடம் போகவில்லை... அவரே வந்தார்... விளைவு வாழ்வு வசந்தமாகிறது. அந்த மாற்றங்களைச் சற்று சிந்திப்போம்.

## 1 அறிந்தவரை அறிந்துக் கொண்டாள்:

வசனம் 28-ல் ''தாகத்துக்குத் தா'' என தன் சம்பாஷனையைத் துவங்கியவரிடம் ... நீர் யூதன், யாக்கோபைப் பார்க்கிலும்

பெரியவரா? கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்றெல்லாம் பேசிய அவளிடம், வேதத்தைக் குறித்த அறிவு இருந்ததையும், முற்பிதாக்களைத் தெரிந்ததையும், மேசியா வருவார் என அறிந்தும் துணி கரமாய் பாவத்தில் வாழ்ந்திருந்ததையும் பார்க்கிறோம்.

ஒரு சிறுவன் தினமும் ஜெபிப்பதற்கு ஆலயத்திற்கு வருவதைக் கண்ட போதகர் அன்று அந்தச் சிறுவன் என்னதான் செய்கிறான் என்று பார்க்க ஆலயத்திற்குள் வந்தார். அந்த சிறுவன் மிகவும் பக்தி யோடு "ஆண்டவரே, எங்க அப்பாவிற்கு ஒரு அடி இறக்கும்" என்று ஜெபித்தானாம். போதகருக்கோ ஒரே ஆச்சரியம். ஜெபம் முடியும் வரைக் காத்திருந்த அவர் இந்த ஜெபம் எனக்கு விளங்கவில்லையே என்று அந்த சிறுவனிடம் கேட்டார். அவன் சொன்னான் ஐயா என் அப்பாவிற்கு வேத அறிவு மிக நன்றாக இருக்கிறது. ஆனால் அது தலை அறிவாய் மூளை அறிவாய் இருக்கிறது; அது ஒரு அடி இறங்கி இருதயத்திற்குள் வந்தால் அவர் உண்மை கிறிஸ்தவராக இருப்பார் என்றானாம். எத்தனை அர்த்தமுள்ள வார்த்தைகள். ஒரு தேவனுடைய மனிதன் குறிப்பிடும் பொழுது ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார் என்பதைப் புரிந்துக் கொள்ளும் முக்கிய அடையாளமானது, நமக்குள்ளிருக்கும் ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு அல்ல, மாறாக நமக்குள் காணப்படும் சிறிய பாவம் கூட அதிக அருவருப்பாக தோன்றும்போது மட்டுமே ஆகும். ஆண்டவரின் பார்வையில் பெரிய பாவம், சிறிய பாவம் என்றல்ல பாவம் பாவமே. இவைகள் நம் பரிசுத்த வாழ்விற்குத் தடையாக உள்ள ஆணிகளாகும். அவை களை நம் அந்தரங்க வாழ்விலிருந்து பிடுங்கி எறிய வேண்டும். இதற்கு ஒரே வழி நீங்கள் அவரிலும் அவருடைய வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருப்பதே (யோவான் 15:17). வேதத்தோடுக் குறைவான நேரம் செலவிடும் பொழுது சாத்தானோடு போராட அதிக நேரம் தேவைப்படுகிறது. Dr. பில்லி கிரஹாம் குறிப்பிடுகிறார் தேவனைப் பற்றி அறிவதற்கும், தேவனை அறிவதற்கும் வித்தியாசம் உண்டு (There is a difference between knowing God and knowing about God) நாம் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமா? அல்லது கிறிஸ்து வைப் பற்றி அறிந்திருக்கிறோமா?

## 2 அறிந்தவள் அறிக்கையிட்டாள்:

''தாகத்திற்குத் தா'' என துவங்கி, ஜீவ தண்ணீரைக் குறித்துப் பேசி, நித்தியத்தின் உண்மையை இயேசுவானவர் உணர்த்திய வுடன் அவள் செய்த காரியம்

4:17 – உள்ளபடி உண்மையை அறிக்கை யிட்டாள்

4:19 – ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்றாள்

அதுவரை தன் நிலை உணராத நபராய் வாழ்ந்திட்ட அவளின் உள்வாழ்வின் தாறுமாறுகளை ஆண்டவர் உணர்த்தி யவுடன் உள்ளபடி வந்தாள், உண்மைத் தன்மையை அப்படியே ஒப்புக்கொண்டாள், தன்னை முழுமையாய் அர்ப்பணித்தாள். இன்று நம்மில் அநேகருக்கு இரட்சிப்பு அனுபவமாக இல்லை; இரட்சிக்கப்பட்ட வர்களுக்கும் தெளிவில்லை. அதனால் அறிக்கையிடுவதில் பலனில்லை. மூன்று நிலைகளைக் கொண்ட இந்த இரட்சிப்பு நமக்குத் தரும் தெளிவு, 1. கடந்த கால இரட்சிப்பு – நம்மை பாவத்தின் தண்டனை யிலிருந்து விடுதலையாக்குகிறது. (Penalty of sin) 2. நிகழ்கால இரட்சிப்பு – பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையாக்குகிறது. (Power of sin) 3. வருங்கால இரட்சிப்போ பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே விடுதலைத் தருகிறது (presence of sin). இதை அனுபவித்த உடனே தான் "ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி என்று அறிக்கையிட்டாள். இதை வாசிக்கும் அன்பர்களே உங்களுக்குத் தேவனின் தனிப்பட்ட தொடுதல் உண்டா?

***மனஸ்தாபம் இல்லாத மனந்திரும்புதல்***
***ஒப்புரவு இல்லாத ஒப்புக்கொடுத்தல்***

நமக்கு அன்பில்லாத ஆவியின் நிறைவு ஒரு நாளும் உதவாது. “தூய்மை பெற நாடு” என்ற பாடலை எழுதிய வில்லியம் லாங்ஸ்டாப் (William Longstaff) ஆங்கிலத்தில் அவர் எழுதிய “நேரமெடுங்கள்” என்பதாகும். எனவே தூய்மையாக வாழ நேரமெடுப்போம்.

## 3 அறிக்கையிட்டவள் அறிவித்தாள்:

அறிக்கையிட்டவளின் வாழ்வில் இப்பொழுது புது பெலன். யோவான் 4:28-ல் குடத்தை வைத்து விட்டு அடக்கி வைக்க முடியாமல் ஓடுகிறாள்.

- ஒதுங்கி வாழ்ந்தவள் மக்களைத் தேடி ஓடுகிறாள்.
- தனது தாகத்தை விட மற்றவர்களுக்குத் தாகம் தீர்க்கும் நாயகரை அறிவித்திடத் துடிக்கிறாள்.
- பேச்சைத் தவிர்த்தவள் வந்து பார்க்க அழைக்கிறாள். எப்படி இப்படி ஒரு மாற்றம்? கிறிஸ்துவைச் சந்தித்த எந்த ஒரு மனிதனும் அமைதியாய் இருந்ததை வேதம் முழுவதி லும் காண முடியாது. யோவான் 1:14-ல் கிறிஸ்துவை மேசியாவாகக் கண்ட அந்தி ரேயா நேராக தன் சகோதரனிடம் சென்று சொன்ன முதல் வார்த்தை “மேசியாவைக் கண்டேன்” என்று ....

மாற்கு 5-ல் கிறிஸ்துவினால் விடுதலைப் பெற்ற லேகியோன் வசனம் 18, 19-ல் அவரோடே கூட இருக்கும்படி வேண்டிக் கொண்டான். இயேசுவோ, முதலாவது உன் இனத்தாரிடத்தில், வீட்டில், கர்த்தர் உனக்கு இரங்கிச் செய்ததை அறிவி என்றார். அவன் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணினான் என வாசிக்கிறோம். தமஸ்குவின் வீதியில் கிறிஸ்துவைச் சந்தித்த சவுல் பிரசித்தம் பண்ணினான் என வாசிக்கிறோம். தமஸ்குவின் வீதியில் கிறிஸ்துவைச் சந்தித்த சவுல் அப்.9:20-ல் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்.

பிரியமானவர்களே! இரட்சிக்கவே இரட்சிக்கப் பட்டோம்; விடுவிக்கவே விடுதலைப் பெற்றோம்... சிறைச் சென்ற நம் விசுவாசிகள், ஊழியர்களின் சாட்சியை நாம் கேட்கும்போது வெளியே பிரசங்கித்த இயேசுவை உள்ளே வாழ்ந்து காட்டியதின் விளைவாக சிறை வாசிகளே அவர்களிடம் கிறிஸ்துவைக் கேட்டு அனுபவித்த சந்தோஷத்தைக் கேள்விப்பட்டுள்ளோம். யோ. 4:39-ல் அவளுடைய வார்த்தை, இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களாக அநேகரை மாற்றியது. வசனம் 40-ல் இன்னும் தங்கி, இயேசுவை தங்களுக்குச் சொல்ல வேண்டும் என்ற வாஞ்சையை உருவாக்கியது. வசனம் 41,42-ல் அநேகர் விசுவாசித்து இயேசுவை “உலக இரட்சகர்” என்று அறிந்துக்கொள்ள உதவியது. மிகுந்த கனி கொடுக்கும் நபராக மாறினார்கள். இப்படிப்பட்ட கனி கொடுக்கும் ஜீவியத்தை தேவன் நம்மிலும் எதிர்பார்க்கிறார். அறிந்தவரை சரியான விதத்தில் அறிந்து அவரிடம் நம் பாவங்களை அறிக்கையிட்டு, அறிந்தவரை அறிவிக்கும் செயல் வீரர்களாய் செயல்படுவோம். புதைக்கப்படும் விதைதான் மண்ணை விட்டு மரமாக எழுகிறது. மிதிக்கப்படும் மண்தான், மிருதுவான பானையாகிறது. தோற்றுப் போகும் மனிதன்தான் துணிவுப் பெற்ற கிறிஸ்தவனாகிறான். உடைக்கப்படும் போது, ஒதுக்கப்படும்போது, வெறுக்கப்படும்போது ஆண்டவர் சமூகத்தைத் தேடி அவரில் நிலைத்திருப்போமானால் நாமும் தேவனால் அழகாய் உருவாக்கப்பட்டு கனி கொடுக்கிற வர்களாக வாழ கர்த்தர் கிருபைச் செய்வாராக!

**- சகோதரி வசந்தி இம்மானுவேல்**

# போண்ட்விகிர் திருச்சபை வரலாறு

## அஹ்வா பணித்தளம், சஹாயாத்ரி பிராந்தியம் குஜராத் (மேற்கு) மண்டலம்



*எழுதியவர்:*
**அருட்திரு. எல். மாசிலாமணி**

**334** மக்கள்தொகை கொண்ட போண்ட்விகிர் கிராமம், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள டாங் மாவட்டத்தின் சுபிர் தாலுகாவில் அமைந்துள்ளது. கிராமத்தின் அருகிலுள்ள நகரம் மகாராஷ்டிராவிலுள்ள நவாப்பூர் ஆகும். அஹ்வா மாவட்டத்தின் தலைமையகமாகும். கிராமத்தின் மொத்த பரப்பளவில் 1.12 சதுர கிலோ மீட்டர் 41% காடுகளால் சூழப்பட்டுள்ளது. இந்த கிராமத்தில் 334 பேர் வசிக்கின்றனர். அவர்களில் 152 பேர் 46% ஆண்கள் மற்றும் 182 பேர் 54% பெண்கள். மொத்த மக்கள் தொகையில் 1% மற்ற சாதிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் 99% பழங்குடியின இனங்களைச் சேர்ந்தவர்களாவர். இக்கிராமத்தில் 77 குடும்பங்கள் உள்ளன. மொத்தம் 176 பேர் கல்வியறிவு பெற்றவர்கள். பெரும்பாலான கிராம மக்கள் பழங்குடியினர் (ST) மக்களாவர். இங்கு தாழ்ந்த சாதியினர் (SC) மக்கள் இல்லை.

### ஆரம்பம்

08.05.1981 அன்று அருட்திரு. எல். மாசிலாமணி குடும்பத்தினரால் அஹ்வா பணித்தளம் திறக்கப்பட்டது. அவர்கள் ஏப்ரல் 1993 வரை இந்தப் பணித்தளத்தில் தொடர்ந்து ஊழியம் செய்தார்கள். பின்னர் பெத்துவேல் பர்தன் குடும்பம் இந்தப் பணித்தளத்தில் மிஷனரிகளாகச் சேவை செய்தனர். ஜுலை 1995-ல் அருட்திரு. டி. ஆபிரகாம் குடும்பம், அருட்திரு. பெத்துவேல் பர்தன் குடும்பத்துடன் உடன் ஊழியர்களாக இந்தப் பணித்தளத்தில் இணைந்து, பின்னர் 1996-ல் பணித்தளத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

பெகடூன் சபை மக்களும், சுதேச ஊழியர் அருட்திரு. ஜிமன்பாய் என்பவரும் போட் விகிர் கிராமத்தில் ஒரு சபையை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தனர். சில நோயாளிகள் குணமடைவதற்காக பெகடூன் சபைக்குச் சென்றனர். சுதேச ஊழியர் ஜிமன்பாய் மற்றும் சபை மூப்பர் சுதிர்பாய் ஆகியோரின் பிரார்த்தனையால் அவர்கள் குணமடைந்தனர். அவர்களின் சிலருடைய சாட்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### ராகுபாய் இந்தர்பாய் பவார்

என் அம்மா காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அம்மா நோயிலிருந்து நிவாரணம் பெற முதலில் நாங்கள் பிபால்தகாட் கிராமத்திலுள்ள தர்காவுக்கு 2 வருடங்களாகச் சென்று ரூ.12,000/-

செலவழித்தோம். ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை. கடைசியாக, கிறிஸ்தவத்தில் முயற்சி செய்ய நினைத்தோம். முன்பு சிலர் பெகடு னுக்குச் செல்வதுபோல, நாங்களும் பெகடூன் சபைக்குச் சென்றோம். ஜிமன்பாய் அம்மாவுக்காக பிரார்த்தனைச் செய்தார். மேலும் அவர் எங்கள் வீட்டில் பிரார்த்தனைக் கூட்டத்தையும் நடத்தினார். பிரார்த்தனையால் என் அம்மா குண மடைந்தார்கள்.

## சாந்தாராம்பாய் இந்தர்பாய் பவார்

எனக்கு பதினைந்து வயதாக இருந்தபோது, நோய்க்குமேல் நோய் வந்தது. நான் அஹ்வாவிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். இதய நோய் மற்றும் வயிற்றில் கட்டி இருப்பதாக மருத்துவர் கூறினார். சூரத் மருத்துவமனை யில் சிகிச்சைக்குப் பரிந்துரைத்தனர். என் அப்பா, என் அம்மாவிடம் ஆலோசனை கேட்க விரும்பினார். என் அம்மா கிறிஸ்தவ நம்பிக்கையை முயற்சி செய்யச் சொன்னார்கள். என் அம்மா வின் சகோதரியும் அங்கு வசிப்பதால் நாங்கள் பெகடூன் சபைக்குச் சென்றோம். சபையின் மூப்பர் சுதிர்பாய் எனக்காக பிரார்த்தனைச் செய்தார். ஒரு மாதத்திற்குள் என் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. ஜரி கிராமத்தில் நான் என் விசுவாசத்தை அறிக்கையிட்டபின் முழு குணமடைந்தேன். இப்படியாகச் சில நோயாளிகள் பெகடூன் கிராமத்திற்குச் சென்று, தங்கள் நோய்களிலிருந்து குணமடைந்த பிறகு கிறிஸ்தவர்களாக மாறினர். எனவே 1996-ம் ஆண்டில், இந்த கிறிஸ்தவர்கள் FMPB மிஷனரி டி. ஆபிரகாம் மற்றும் சுதேச ஊழியர் ஜிமன் பாய் ஆகியோரை தங்கள் கிராமங்களில் கூட்டங்களை நடத்த அழைத்தார்கள். ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளைத் தங்கள் கிராமத்திலும் தொடங்கும் திட்டத்தை அவர்கள் வைத்திருந்தனர். போண்ட்விகிர் கிராமத்தைச் சேர்ந்த சுதேச ஊழியர் ராம்ஜுபாயின் மூன்று சகோதரர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். அவர்களின் மூத்த சகோதரர் மங்குபாய் அவர்களில் முதல் விசுவாசி.

## சுதேச ஊழியர் ராம்ஜுபாய் சித்ருபாய் அகிர்



நாங்கள் எங்கள் பழங்குடி மதத்தைப் பின்பற்றி வந்தோம். ஒருநாள் எனக்கு ஒரு கனவு வந்தது. நான் கருப்பு நிற பிசாசைப் பார்த்தேன். அது என்னுள் நுழைந்து என்னைத் துன்புறுத்துவேன் என்று சொன்னது. நான் தூங்கிக்கொண்டிருந்தேன். என் தலையிலிருந்து கால் வரை ஏதோ சென்றதுபோல் உணர்ந்தேன். நான் பயந்து போனேன். ஏற்கெனவே எனது மூத்த சகோதரர் மங்குபாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தார். என் தந்தை ஒரு சூனிய மருத்துவர் (பகத் அல்லது மந்திரவாதி). என் இதயத் துடிப்பைச் சரிபார்க்கும்படி அவரிடம் கேட்டேன். எதையும் பார்க்க முடியவில்லை என்று கூறினார். அதனால் நான் என் சகோதரனைப் போல கிறிஸ்துவைப் பின்பற்றுவேன் என்று சொன்னேன். எனவே எனக்காக ஜெபிக்கும்படி என்

சகோதரனைக் கேட்டேன். எனக்காக ஜெபித்தார்கள். நாங்கள் சேப்புஆம்பா சபைக்குச் சென்றுகொண்டிருந்தோம். 1998-ல் விஷ்வ ஹிந்து பரிஷத்தைச் சேர்ந்த அசிமானந்த் என்பவரால் தூண்டப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு விரோதமான ஒரு துன்புறுத்தல் ஏற்பட்டது. செப்புவாம்பா ஆலயம் இடிக்கப்பட்டது. பின்னர் பெகடூன் கிராமத்தைச் சேர்ந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் பணி புரிந்து வந்த சுதேச ஊழியர் ஜிமன்பாயைத் தொடர்பு கொண்டோம். அவர் எங்கள் கிராமத்திற்கு வந்து 1999-ல் எனது அண்ணன் மங்குபாய் வீட்டில் ஆராதனைக் கூட்டம் தொடங்கினார். அந்தக் கூட்டத்திற்குப் புதிய வர்கள் பலர் வந்தனர். மிஷனரி டி. ஆபிரகாம் வந்த 2001-ல் தற்காலிக (குச்சா) ஆலயத்தைக் கட்டினார். என்னை சுதேச ஊழியராகப் பணிபுரியும்படி கேட்டுக்கொண்டார். எனவே 2004-ல் நான் தேவபணியைச் செய்ய ஆரம்பித்தேன். இவ்வாறு வழக்கமான கூட்டங்கள் 1999-ல் மங்குபாயின் வீட்டில் FMPB சுதேச ஊழியர் ஜிமன் பாய் அவர்களால் தொடங்கப்பட்டது. மற்றும் 2001-ல் ஒரு சிறிய தேவாலயம் அமைக்கப்பட்டது. பின்னர் 2008-ல் பிரதான சாலைக்கு அருகிலுள்ள அவர்களின் நிலத்தில் ஒரு பெரிய தேவாலயம் கட்டப்பட்டது.

## ஆலயக்கட்டுமானம்

ஆலய ஆராதனைகள் 1999-ல் மங்குபாயின் வீட்டில் FMPB-யால் தொடங்கப்பட்டது. தற்காலிக ஆலயம் 2001-ல் கட்டப்பட்டது. கூட்டங்களை நடத்த ஜிமன்பாய், அவஸ்யாபாய் ஆகியோர் வந்தார்கள். தற்போதைய ஆலயம் சுதேச ஊழியரின் குடும்பத்தின் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. அவருடைய நான்கு சகோதரர்கள் குடும்பங்களும் கிறிஸ்தவர்களாவர். ஆலயத்திற்கு வழங்கப்பட்ட நிலம் 20 அடி அகலமும் 40 அடி நீளமும் கொண்டது. நிரந்தர ஆலயம் 10.04.2007 அன்று தொடங்கப்பட்டு 28.09.2008 அன்று முடிக்கப்பட்டு 28.09.2008 அன்று அர்ப்பணிக்கப்பட்டது. ஆலயத்தின் ஜன்னல்கள், கதவுகள் மற்றும் கூரைக்குத் தேவையான மரங்களை மக்கள் நன்கொடையாக வழங்கினர். மக்கள் தங்கள் இலவச உழைப்பைக் கொடுத்தனர். ஆலயத்துடன் போதகர் அறையும் கட்டப்பட்டுள்ளது. ஆலயப் பிரதிஷ்டைக்கு மிஷனரிகள் அருட்திரு. எஸ். அருள்ராஜ், அருட்திரு. டி. ஆபிரகாம் ஆகியோர் வந்திருந்தனர். தமிழகத்திலிருந்து ஆலயம் கட்டிட உதவி செய்தவரும் (Sponsor) வந்திருந்தார்.

## ஆலயத்தின் வளர்ச்சி –

### மஹாருபாயின் மகன் விபின்பாய் மஹாருபாய் தேஷ்முக், அவர்களின் சாட்சி:

என் அம்மாவுக்கு நாங்கள் சிறுபிள்ளை களாக இருக்கும்போது இனம்தெரியாத நோயினால் உடல்நிலை சரியில்லா திருந்தது. அவர்கள் முஸ்லீம் மக்களின் வழிபாட்டு ஸ்தலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆடுகள் பலியிடப் பட்டு அதிக பணம் செலவு செய்தோம். போண்ட்விகிரில் மூன்று கிறிஸ்தவர்கள் இருந்தனர் – அவர்கள் ஜிமன்பாய், ஜீவுபாய் மற்றும் ரோக்யாபாய் என்பவர்களாவர். என் அம்மா பிரார்த்தனை மூலம் குணமடை வார்கள் என்று அவர்கள் எங்களுக்கு உறுதியளித்தனர். அவர்கள் என் அம்மா வுக்காகப் பிரார்த்தனைச் செய்தார்கள். என்

அம்மா குணமடைந்தார்கள். ஆராதனைக் கூட்டங்களுக்கு செப்புவாம்பா ஆலயத்திற்குச் சென்றோம். 1998-ல் ஏற்பட்ட கிறிஸ்தவ எதிர்ப்பில் எங்கள் ஆலயப் போதகர் உனாய் ஊரிலுள்ள கோவிலுக்கு, பழைய மதத்திற்கு மாற்றிட அழைத்துச் செல்லப்பட்டார். அவர் உனாய் கோவிலில் குளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எங்கள் தாயின் சகோதரர் எங்களையும் கிறிஸ்தவ நம்பிக்கையை மறுதலிப்பதற்காக உனாய்க்குச் செல்லுமாறு கூறினார். ஆனால் நாங்கள் அதை மறுத்து FMPB மூலம் எங்கள் கிராமத்தில் நடத்தப்பட்டு வந்தக் கூட்டங்களில் கலந்துக்கொள்ள ஆரம்பித்தோம்.

## FMPB மூலம் வட இந்தியத் திருச்சபைக்குச் சபையை ஒப்படைத்தல்

போண்ட்விகிர் சபை ஏப்ரல் 2013-ல் வட இந்தியத் திருச்சபை குஜராத் திருமண்டலத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சபை பெகடுன் சேகரத்தின் கீழ் வருகிறது. இப்போது 45 குடும்பங்கள் கிறிஸ்தவ நம்பிக்கையில் உள்ளனர். 35 குடும்பங்கள் விசுவாசத்தில் உறுதியாக உள்ளனர். ஞாயிறு ஆராதனைகளுக்கு 120-க்கும் மேற்பட்டோர் வருகின்றனர். ஞாயிறு ஆராதனைகளில் ஆலயம் முழுமையாக நிரம்பி வழிகிறது. ஆலயம் கட்டப்பட்ட காலத்தில் எந்த எதிர்ப்பும் இல்லை. பீல் பழங்குடியினத்தைச் சேர்ந்த 15 குடும்பங்களும், குக்னா பழங்குடியினத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களும் சபையின் அங்கத்தினர்களாக உள்ளனர். சாந்தாராம் பாய் இந்தச் சபையின் உபதேசியாராக தன்னார்வமாகப் பணியாற்றுகிறார். ஒவ்வொரு வருடமும் விசுவாசத்தில் 10 முதல் 15 பேர் புதிதாகச் சேர்க்கப்படுகிறார்கள். முக்கியமாக நோய்களிலிருந்து சுகம் பெறுவதினால் அவர்கள் வருகிறார்கள்.

## சபையில் நடக்கும் ஊழியங்கள்

ஞாயிறு ஆராதனையும், ஞாயிறுப் பள்ளியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, அதனை சகோதரி பிரமிளா நடத்துகிறார். 25 குழந்தைகள் கலந்துக் கொள்கின்றனர். இளைஞர்கள், பெண்கள் கூடுகை மற்றும் வீட்டு ஜெபக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப் படுகின்றன. சுதேச ஊழியர் திரு. ராம்ஜுபாய் முழுநேரப் பணியாளராகப் பணியாற்றுகின்றார். இந்த சபையைச் சேர்ந்த சோம்நாத் பெத்தேல் வேதாகமக் கல்லூரியில் (B.Miss) கற்றுவிட்டு, இப்போது FMPB மிஷனரியாக சத்தீஸ்காரில் பணிபுரிகிறார். கிறிஸ்துவை ஏற்றுள்ளதால் வரும் நன்மைகள்: ஏவல், வைத்தியர்களுக்கான செலவுகளில் சேமிப்பு, பணசெலவின்றி நம்பிக்கையினால் மட்டுமே குணமடைவது போன்ற நன்மைகளைப் பற்றி கிராமத்திலுள்ள மக்களிடம் ஊழியர்கள் நற்செய்தியைப் பகிர்ந்துக் கொள்கிறார்கள்.

## ஜெபக்குறிப்புகள்

பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் தங்கள் கல்வியை நன்றாக முடிப்பதற்கான அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கவும்; நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கவும் ஜெபிப்போம். 50% மக்கள் கரும்பு தோட்டங்களுக்குச் செல்கின்றனர். இந்த புலம்பெயர்வோர்களுக்கு தங்கள் சொந்த ஊரிலேயே வேலைகள் கிடைத்திட ஜெபிப்போம். அவர்களின் சொந்த கிராமத்தில் சில தொழில்கள் வழங்கப்பட; படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஜெபிப்போம்.

# காலச் சுவடுகள்

# வில்லியம் ஹன்டர்



இங்கிலாந்து தேசத்தில் சீர்திருத்த சபை தொடங்கிய ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவப் பெற்றோரால் உண்மையாய் சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படி வளர்க்கப்பட்ட வாலிபன் தான் வில்லியம் ஹன்டர். ஒரு நாள் லண்டனில் உள்ள எஸெக்ஸ் பட்டணத்தி லுள்ள பிரெண்ட் உட் என்னும் இடத்தில் உள்ள ஆலயத்துக்கு ஆராதனையில் கலந்து கொள்ள ஆலயம் தொடங்கும் முன்பே ஆலயத்திற்குள் சென்றார் வில்லியம் ஹன்டர். அங்கு மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த வேதாகமத்தைக் கண்ட அவர் ஆவலோடு திறந்து வாசிக்க ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் வேதத்தை மிகமிக பரிசுத்தப் புத்தகமாக, காட்சிப் பொருளாக மாத்திரம் வைத்திருந்தனர். பிஷப் போன்ற குறிப்பிட்டவர்கள் தவிர வேறு யாரும் வேதாகமத்தை தொட்டுவிடக் கூடாது. அத்தனை பரிசுத்த புத்தகமாக மக்களை பயமுறுத்தி நம்ப வைத்தி ருந்தனர். வாலிபனான வில்லியம் ஹன்டர் ஆலயத்துக்குள் இருந்த வேதாகமத்தைத் திறந்து வாசித்தார். வாசிக்க வாசிக்க அவருக்குள் சொல்ல முடியாத சந்தோஷம் பெருகியது. இச்சமயத்தில் பிஷப் நீதிமன்ற அதிகாரி ஒருவர் அந்த வாலிபன் வேதபுத்தகத்தை தன் கையால் தொட்டு திறந்து வாசிப்பதைப் பார்த்து அந்த புனித மான புத்தகத்தை நீ எப்படி தொடலாம்? இது பெருங்குற்றமாகச் சபைச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது என்றார். உடனே வில்லியம் ஹன்டர் பிஷப்பின் காவலாளர் களால் கைதுச் செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவரோ, “இவ் வேதம் வாசிக்க வாசிக்க மிக ஆறுதலாகவும், உலகில்வாழ பல நல்ல பரிசுத்த வழிகள் அதில் எழுதப்பட்டுள்ளதாகவும், ஆவிக்குரிய முன்னேற்றத்துக்காகவும் நான் அதை வாசித்தேன்” என்றும் கூறினான்.

அந்த அதிகாரி அவரை பிஷப் முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினார். பிஷப் அவர்கள் வாலிபனைப் பார்த்து மகா பரிசுத்த வேத புத்தகத்தை நீ தொட்டு வாசிக்க அனுமதி யளித்தது யார்? என்று ஆத்திரத்துடன் கேட்டார். அதற்கு அந்த வாலிபன் முன்பு பிஷப் நீதிமன்ற அதிகாரியிடம் கூறிய பதிலையே பிஷப்பிடமும் கூறினான். இனி நீ வேதத்தைத் தொடுவதோ, வாசிப்பதோ கூடாது என்று கண்டிப்பாக அவனுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அந்த பையனோ சற்றும் பயப்படாமல் நான் உயிரோடு இருக்கும் காலம் வரை வேதத்தை எங்கிருந்தாலும் இரகசியமாக வாங்கி படிக்க புதிய தீர்மானம் எடுத்திருப்ப தாகவும், அது என்னை பரிசுத்தமாகவும், உண்மையுள்ளவனாகவும் வாழ வைக்க உதவும் என்றும் தான் நம்புவதாகவும் கூறினான். அவனின் தீர்க்கமான பதிலால் பிஷப் கோபமுற்று இவன் ஒரு கிறிஸ்தவ மத விரோதி என்ற பிஷப்பின் குற்றச்சாட்டுடன் நீதிபதி முன் நிறுத்தப்பட்டார். கிறிஸ்தவ சபைக்கு எதிரான வேத புரட்டன் என்று அவர் மேல் குற்றஞ்சாட்டப்பட்டு லண்டனிலிருந்து

பெரிய பிஷப்புக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. செயிண்ட் பால்ஸ் என்ற இடத்திலிருந்த கிறிஸ்தவ மத சம்பந்தமான நீதிமன்றத்துக்கு முன் அவர் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. இங்கு அவர் உயிரோடு எரிக்கப்பட வேண்டும் என்று உடனே தீர்ப்பும் வழங்கப்பட்டது.

கிறிஸ்தவ சமூகம் ஒரு நல்ல கிறிஸ்த வனையே கொல்லும் கொடுமை அங்கு நடந்தது. அந்த வாலிபன் மரணதண்டனை நிறைவேற்றும் வரை ஒரு சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். பல நண்பர்கள், உறவினர்கள் அவனைச் சந்தித்துப் பேசினார்கள், பரிதாபப்பட்டார்கள் அவ்வளவு தான். ஆனால் வில்லியம் ஹன்டரின் தாயும் தகப்பனும் ஜெயிலில் அவனைப் பார்க்க வரும்போதெல்லாம் தன் மகன் மன்னிப்பு கேட்டு மரண தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஆலோசனையைக் கூறாமல், “மகனே நீ தொடங்கிய ஆவிக்குரிய ஜீவிய வழியிலேயே கடைசி வரை தொடர்ந்து நில்” என்று கூறி அவர் சோர்ந்து போகாதபடியும், மரணத்துக்கு அவரை ஆயத்தப்படுத்தும் வண்ணமாகவும் ஜெபம் செய்தார்கள். கிறிஸ்துவினிமித்தம் தன் ஜீவனையே இழக்க முன்வந்த தன் மகனுக்காக அந்தப் பெற்றோர் பெருமிதமடைந்து இப்படி ஒரு மகனை எங்களுக்கு கொடுத்தீரே என்று தேவனைத் துதித்ததை ஜெயில் அதிகாரிகள் கண்டு அதிசயித்தார்கள்.

வில்லியம் ஹன்டர் தன் பெற்றோரிடம், அம்மா என்னை ஒரு மர கம்பத்தில் கட்டி, கீழே நெருப்பை எரிய விட்டு கொல்லப் போகிறார்கள். அந்த நெருப்பு சூடும், எரிச்சலும் கொஞ்ச நேரம் மட்டும் தானே இருக்கும். அதற்குள் நான் மரித்து கர்த்தரின் சமூகத்தில் போய் சேர்ந்து விடுவேன், அங்கு வேதனையோ, எரிச்சலோ இல்லாத அந்த இடத்தில் போய் நிலையான பேரின்பத்தை அனுபவிப்பேனே! அப்படித் தானே நம் வேதாகமத்தில் எழுதியிருக்கிறது. கொஞ்சக் காலம் பாடு அனுபவிக்கிறவர்கள் என்று வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை ஞாபகப்படுத்தி மகன் பெற்றோரை ஆறுதல்படுத்தினார். அந்த கொஞ்ச நேரம் அனுபவிக்கப் போகிற நெருப்பின் வேதனைக்குப் பின் கிறிஸ்து எனக்கு மகிமையின் கிரீடத்தை வாக்கு பண்ணியிருக்கிறார் என்று எல்லோரிடமும் கூறி மகிழ்ந்தான்.

1955-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் தேதி வில்லியம் ஹன்டர் கொலைக்களத்துக்குக் கொண்டுப் போகப்பட்டார். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகு கட்டைகளின்மேல் முழங்கால் படியிட்டான். நெருப்பு பற்ற வைக்கப்பட்டது. இரத்தசாட்சியின் பொறுமையுடனும், முறுமுறுப்பில்லாமலும் தைரியத்தோடும், விசுவாசத்தோடும் தன் ஜீவனை விட்டார்.

அந்த ஆரம்ப நாட்களில் வேதாகமம் யாரோ ஒரு சிலரிடம் தான் இருந்தது. அதை இரகசியமாய் வாசிப்பார்கள். வேதாகமம் வைத்திருந்தாலும், வேதாகமம் வாசித்தாலும் தண்டனை என்று அறிவிக்கப்பட்ட காலம் அது. காரணம் மக்கள் அதை வாசித்தால் கேள்வி கேட்பார்கள். வேதம் வாசித்து மக்கள் விழிப்புணர்வு அடைந்து விட்டால் அன்றைய ஆயர்கள், பிஷப்மார்கள் பணம் கேட்டு மக்களை ஏமாற்ற முடியாது. அந்த முறையில் தான் மரித்துப் போன மூதாதையர் பெயரில் பாவ மன்னிப்பு சீட்டு விலைக்கு விற்கப்பட்டது. ஆகவே வேத புத்தகம் புனிதமானது, அதை யாரும் தொடக்கூடாது, படிக்கக்கூடாது என்றெல்லாம் ஜனங்களை ஏமாறப் பண்ணினார்கள். அதையும் மீறி மார்ட்டின் லூத்தர் போன்றவர்கள் திருட்டுத்தனமாக வேதத்தைப் படித்து உண்மையைத் தெரிந்து மற்றவர்களுக்கு அதை அறிவித்ததால் புரட்சி வெடித்தது. புராட்டஸ்டன்ட் உருவானது. ஆனால் இன்றைக்கு விலை அதிகம் கொடுத்து விலையுயர்ந்த வேதாகமத்தை வாங்கி அதை வாசிக்க மனமில்லாத பெயர் கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்?

*- சகோ. டேவிட் பென்னி*

# மறக்க முடியாத மாமனிதர்கள்



## சகோ. கோகனி பிரவின்பாய் & சகோதரி கோகனி பாருபேன்

### இளமைப்பருவம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவால் குஜராத் மாநிலம் டாங் மாவட்டத்தில் 1976-ம் ஆண்டு குக்னா மக்கள் மத்தியில் வகைய், ஹல்மூடி போன்ற பணித்தளங்களை ஆரம்பித்து திருச்சபைகளை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஊழியத்தின் வாயிலாக ஆயிரமாயிரமான குக்னா மக்கள் ஆண்டவரை ஏற்று, திருச்சபைகளாக மலர்ந்தனர். அவர்கள் மத்தியில் இருந்து மிஷனரிகளான பல வாலிபர்கள் எழும்பியுள்ளார்கள். அப்படி ஊழியத்திற்கு வந்த ஒரு கனிதான் சகோ. கோகனி பிரவின்பாய். குஜராத் மாநிலம், வியாரா தாலுகாவிலுள்ள குயிலிபாடா கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத ஒரு குடும்பத்தில் 1979-ம் ஆண்டு ஜுன் மாதம் 1-ம் தேதி பிறந்தார்.

சகோ. பிரவின்பாயின் தகப்பனார் விவசாயம் செய்து வந்தார், இவருடைய தந்தை பெயர் திரு. லட்சுபாய், தாயார் திருமதி சாத்ராபேன். இவர்கள் ஆடு, மாடுகளை வளர்ப்பது, விவசாயம் செய்வது போன்றவைகளின் வாயிலாக வரும் வருவாயில் வாழ்ந்து வந்தனர். சகோ. பிரவின்பாய் சிறுவனாக இருக்கும்போதே இவருடைய தந்தை திரு. லட்சுபாய் மரித்துப்போனதால், இவருடைய தாயார் இவரை வளர்த்தார்கள். இவருடைய பெயர் கிரிஷ்பாய்.

### இரட்சிப்பின் அனுபவம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியின் வழியாக கிறிஸ்துவின் நற்செய்தியை திருமதி சாத்ராபேன் அறிந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அந்தப் பகுதியில் அநேக திருச்சபைகள் மலர்ந்தபடியால், வருங்கால சந்ததியாகிய சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கொடுக்கத் தீர்மானித்துச் சிறுவர் விடுதி அமைக்கப்பட்டது. நவ ஜீவன் சேவா மண்டல் வாயிலாக நடத்தப்பட்ட சிறுவர் விடுதியில் சகோ. பிரவின்பாய் சேர்ந்து படித்து வந்தார். 1-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை வேதத்தைப் பற்றியும், கிறிஸ்தேசுவைப் பற்றியும் அறிந்து வந்தார். விடுதி மாணவர்களுக்கு 1994-ம் ஆண்டு நடத்தப்பட்ட விசேஷித்த ஆவிக்குரிய கூடுகை ஒன்றில் தன்னை முழுமையாகக் கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்து ஆண்டவரை ஏற்றுக்கொண்டார். 9-ம் வகுப்பு படித்து வந்த பிரவின்பாய் வாழ்வில் இது பெரும் திருப்பமாக அமைந்தது. அனுதினமும் வேதம் வாசிப்பது, ஜெபிப்பது, ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்வது போன்ற காரியங்களில் மும்முரமாய் ஈடுபட்டார்.

### ஊழியத்திற்கு அழைப்பு

சகோ. பிரவின்பாய் இரட்சிக்கப்பட்ட பின் இவருடைய சொந்த பந்தங்கள், மற்றும் இனத்தார் கிறிஸ்துவை அறியவேண்டும் என்ற வாஞ்சை அவருடைய உள்ளத்தில் பற்றியெரிந்துக் கொண்டிருந்தது. தன் இனமக்களுக்கு தானே பொறுப்பாளி என்று வேதத்தின் வாயிலாக கற்றுக் கொண்டார். இவ்விதமாக ஜெபித்து வந்த பிரவின் ஒரு ஆவிக்குரிய கூடுகையின் போது வந்திருந்த

செய்தியாளர் ஏசா 6:8-ன் அடிப்படையில் கொடுத்த இறைச்செய்தியால் தொடப்பட்டு தன்னை ஊழியத்திற்கென அர்ப்பணம் செய்தார். 1998-ல் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்று மேல்படிப்பிற்காகக் காத்திருந்த பிரவின்பாய் தான் ஊழியத்திற்குச் செல்லவேண்டும் என்றும் அதற்கு ஆயத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானித்து இறையியல் கல்லூரியில் இணைந்தார். குஜராத் வேதாகமக் கல்லூரியில் இணைந்து இறையியல் இளநிலைப் பட்டப்படிப்பை 2001-ல் முடித்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் தன்னுடைய குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதால், இந்த இயக்கத்தின் வழியாக ஊழியம் செய்ய விரும்பி அதில் இணைந்தார். 2002-ம் ஆண்டு நேர்முகத் தேர்வில் தேர்வு செய்யப்பட்டு கட்சுவாவில் உள்ள மிஷனரிப் பயிற்சி நிலையத்தில் ஓராண்டு பயிற்சியை 2003-ம் ஆண்டு வெற்றியாக முடித்தார். அதன் பின்பு சத்தீஸ்கார் மாநிலத்தில் ஒராவன் மக்கள் மத்தியில் பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு துபுக்காரா பணித்தளத்தை மையமாக வைத்துப் பணியாற்றி வந்தார்.

## திருமதி கோகனி பாருபேன்

சகோதரி கோகனி பாருபேன் குஜராத் மாநிலம் வியாரா தாலுகாவிலுள்ள பார்டிபாடா கிராமத்தில் 1976-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி பிறந்தார். அவருடைய தந்தை திரு. சித்ராபாய் தாயார் திருமதி இதுபேன். இவருடன் உடன் பிறந்தவர்கள் 3 சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரன். இவருடைய பெற்றோர்கள் நமது மிஷனரிகளின் வாயிலாக கிறிஸ்துவை அறிந்து அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். மிகவும் சுகவீனமாக இருந்த இவருடைய தகப்பன் திரு. சித்ராபாயை, சுவிசேஷத்தை அந்தப் பகுதியில் அறிவிக்க வந்த மிஷனரிகளான திரு. இஸ்ரவேல் தேவதாஸ் மற்றும் திரு. ஜான்சன் பர்னபாஸ் இவர்களிடம் ஜெபத்திற்காக கொண்டு வந்தனர். ஊழியர்களின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர் உடனே நல்ல சுகத்தைக் கொடுத்ததால் திரு. சித்ராபாய் குடும்பமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு பழைய வழிபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

## இளமைப்பருவமும் இரட்சிப்பின் அனுபவமும்

சகோதரி. பாருபேன் படிப்பிற்காக வியாராவில் உள்ள பெத்தேல் விடுதியில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து இயேசுவின் அன்பைப் பற்றியும் மற்றும் வேதத்தைப் பற்றியும் அறிந்து வந்தார். ஜெபிக்கக் கற்றுக்கொண்டார். பாவம், மோட்சம், ஆண்டவர் தரும் விடுதலை போன்ற காரியங்களை அங்கு கற்றுக்கொண்டார். 1996-ம் ஆண்டு வாலிபர்களுக்கென நடத்தப்பட்ட முகாமில் பெத்தேல் தலைவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்கள் தேவனுடைய செய்தியைப் பகிர்ந்துக் கொண்டார்கள். கிறிஸ்துவை நன்கு அறிந்திருந்தாலும், அந்தக் கூடுகையில் தன்னுடைய பாவங்களை அறிக்கைச் செய்து தேவனுடைய மன்னிப்பையும், இரட்சிப்பின் நிச்சயத்தையும் பெற்று தேவனுடைய பிள்ளையாக ஒரு புது வாழ்வைத் தொடங்கினார்.

## ஊழியத்திற்காக அழைப்பு

இரட்சிக்கப்பட்டதில் இருந்து ஒழுங்காக வேதம் வாசித்து ஜெபித்து வந்தார் சகோதரி பாருபேன், தன்னுடைய தோழிகளோடு சேர்ந்து ஜெபித்தும் வந்தார். ஜெபிக்க இன்னும் ஆண்டவர் அவருக்கு மனபாரத்தைக் கொடுக்க அதிக நேரம் ஜெபிக்கக் கற்றுக் கொண்டார். 1997-ம் ஆண்டு இன்னொரு இளைஞர் கூடுகையில் பங்குபெற்றார். அந்தக் கூடுகையில் தேவனுடைய பணி செய்யும் ஊழியர்களின் பகிர்ந்துக் கொள்ளுதலால் தொடப்பட்டு தானும் அப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்ய வேண்டும். கிறிஸ்துவை அறிந்திராத மக்கள் குறிப்பாக தன்னுடைய இனமக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்தைப் பெற்றார். வேதத்தின் வாயிலாக ஆண்டவர் சகோதரி பாருபேனுடன் பேசினார். எனவே தன்னைப் பரிபூரணமாக தேவ சித்தத்திற்கு அர்ப்பணித்து ஊழியம் செய்யத் தன்னை

ஆயத்தப்படுத்தினார். 1997-ம் ஆண்டு இளநிலைப்பட்டப்படிப்பை முடித்து அந்தப் பகுதியில் படித்த மகளாக சாட்சியாக வாழ்ந்தார். 2003-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நடத்திய நேர்முகத் தேர்வில் பங்குபெற்று மிஷனரியாகச் செல்ல தெரிந்தெடுக்கப்பட்டார். பயிற்சிக்குப் பின் ஹரியானா மாநிலத்தில் பெண்கள் மத்தியில் மிஷனரியாகப் பணியாற்றி வந்தார்.

## திருமண வாழ்வு

ஹரியானா மாநிலத்திலுள்ள ரத்தியா பணித்தளத்தில் பணியாற்றி வந்த சகோதரி பாருபேனுக்கு, சத்தீஸ்கார் மாநிலத்தில் ஒராவன் மக்கள் மத்தியில் பணிபுரிந்து வந்த சகோ. பிரவின்பாய் என்ற மிஷனரியுடன் திருமண ஏற்பாட்டை பெற்றோர்கள் மேற்கொண்டனர். சகோ. பிரவின்பாய் மற்றும் பாருபேன் திருமணம் குயிலிபாடா ஆலயத்தில் வைத்து 2005 மே மாதம் 14-ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. வரவேற்பு நிகழ்ச்சிகள் பெண்ணின் ஊராகிய பார்டிபாடாவில் நடைபெற்றது. இவர்களது திருமண வாழ்வை தேவன் ஆசீர்வதித்து 2006-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார். அவளுக்கு பிரசன்ஷா என்று பெயரிட்டனர். பின்பு 2009-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி ஒரு ஆண் மகவை தேவன் கட்டளையிட்டார். அவனுக்கு பிரின்ஸ் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

## திருச்சபை நாட்டும் பணியில்

திருமணத்திற்குப் பின் இருவரும் சத்தீஸ்கார் மாநிலம் தபுக்காரா பணித்தளத்தை மைய மாக வைத்துப் பணிசெய்து வந்தார்கள். இவர்களின் ஊழியத்தின் வாயிலாக அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, 7 திருச்சபைகளில் தேவனை ஆராதித்து வருகின்றனர். 239 மக்கள் திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவை அறிக்கை செய்துள்ளனர். 3 இடங்களில் இரவுக் கூடுகைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு ஆராதனை குழுக்கள் உருவாகும் வாய்ப்பு இருந்தது. மிகவும் திறமையுடன் பணியாற்றி வந்தனர். ஒராவன் மொழியைக் கற்று அந்த மொழியில் நற்செய்தியை அறிவித்து வந்தனர்.

## இறுதி நாட்கள்

2010-ம் ஆண்டு ஜுன் மாதம் 5-ம் தேதி பார்த்தோபாரா கிராம விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய கூட்டம் நடத்த கன்சாபெல்லில் இருந்து இரு சக்கர மோட்டார் சைக்கிளில் தன் மனைவி இரு பிள்ளைகளுடன் சென்று கொண்டிருந்தார். சுமார் 2 கி.மீ தொலைவு சென்ற போது ஒரு சிறு குறுகலான பாலத்தைக் கடக்க வேண்டியதாயிருந்தது. எதிரே ஒரு சிறிய பஸ் வந்துக்கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் 100 அடிக்கு முன்னே பிரவின்பாய் தன்னுடைய வாகனத்தை நிறுத்தி நின்றுக்கொண்டிருந்தார். அவருடைய மனைவி பாருபேன் தன் சிறு குழந்தையுடன் வண்டியிலிருந்து இறங்கி பஸ் கடந்து செல்லக் காத்திருந்தனர். வேகமாக வந்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து சாலை அருகே நின்றுகொண்டிருந்த இந்தக் குடும்பத்தின் மீது மோதியது. பாருபேன் மற்றும் சிறு மகன் பிரின்ஸ் மீது பஸ் சக்கரம் ஏறியபடியால் அந்த இடத்திலேயே அவர்களது உயிர் பிரிந்தது. தூக்கி எறியப்பட்ட பிரவின்பாய் தன் சுயநினைவை இழந்தவராகக் காணப்பட்டார். மகள் பிரசன்ஷா சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். இவர்கள் இருவரையும் உடனே அருகில் உள்ள கன்சாபெல் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். மருத்துவமனையில் கொடுத்த சிகிச்சை பலன் கொடுக்காமல் 2010-ம் ஆண்டு ஜுன் மாதம் 5-ம் தேதி பிரவின்பாய் தேவ ராஜ்யம் சென்றடைந்தார். செய்தியைக் கேள்விப்பட்டு அருகில் உள்ள அனைத்து மிஷனரிகளும் அங்கு வந்து தேவையான அனைத்துக் காரியங்களையும் செய்தனர். பிரவின் பாயின் குறுகிய கால ஆயுள்நாளில் கடின மான மிஷனரிப் பணிக்காக ஆண்டவரைத் துதிப்போம். அவர்களுடைய மகள் பிரசன்ஷா கேரளாவில் மருத்துவ நுழைவுத் தேர்விற்கான ஒருவருட படிப்புப் படித்து வருகிறாள். இந்தக் குடும்பத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்தி, பிள்ளையின் எதிர்காலத்திற்காக ஜெபிப்போம்.

*– அருட்திரு. அறிவர். E. ராஜன்*

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. தயாளன் சுவாமிதாஸ் அவர்கள், நந்திவரம், கூடுவாஞ்சேரி பகுதியில் கடந்த 30 ஆண்டுகளாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவராக அர்ப்பணத்தோடு ஊழியம் செய்து வந்தார்கள். (வயது - 64) கடந்த 16 ஜூன் 2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் வாழ்க்கைக்காக தேவனைத் துதிப்போம். அவர்களது மனைவி மற்றும் மகன் குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



பிராட்வே பகுதியைச் சார்ந்த நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் - டக்கர் பகுதி ஜெபக்குழுத் தலைவரான திரு. மைக்கேல் பொன்னுதுரை அவர்கள், கடந்த 20 ஆண்டு காலமாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களில் தனது முழு ஆதரவை ஜெபத்தாலும், காணிக்கையாலும் தாங்கி வந்தவர்கள். அவர்கள் கடந்த 19.06.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் வாழ்க்கைக்காக தேவனைத் துதிப்போம். அவர் விட்டுச்சென்றுள்ள அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் - பெண்கள் கூடுகை - 2023

**திருவான்மியூர் - ECR**

நாள்: 05.08.2023 சனிக்கிழமை, நேரம்: காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை
இடம்: மீட்பர் ஆலயம் - பாலவாக்கம் கிழக்கு கடற்கரை சாலை
தொடர்பு: 94442 10109, 98844 09290

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வாலிபர் கூடுகை - 2023

**குரோம்பேட்டை பணி மாவட்டம்**

நாள்: 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை, நேரம்: மாலை 5.30 மணிக்கு
இடம்: ஆலிவ் பப்ளிக் பள்ளி வளாகம், எண். 1 சர்வமங்களா நகர்,
2-வது மெயின் ரோடு, சிட்லப்பாக்கம், சென்னை - 64.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குடும்பக்கூடுகை - 2023

**கீழ்க்கட்டளைப் பணி மாவட்டம்**

நாள்: 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை, நேரம்: மாலை 6.00 மணிக்கு
இடம்: சக்தி மஹால், மேடவாக்கம் மெயின் ரோடு, கோவிளம்பாக்கம், நன்மங்கலம்.

**1 ஆகஸ்ட்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மதுரா சாந்தி ரம்யா ராஜு
திரு. மஞ்ஜ்யா நாயக் G., திரு. ராஜா B.
திருமதி. ஃப்ளாரன்ஸ் தௌஜபாவ்
திருமதி. ஜெபராணி எபநேசர் சாம்
திரு. க்ருபா ரக்ஷ்னா பரே

# ஜம்மு

## உதம்பூர்:

### அருண் காந்தா & ரேணு

**துதிக்க:** வெளிப்புறக் கூடுகைகள், சத்சங் கூடுகை மற்றும் இரவு கூடுகைகளின் வாயிலாக 826 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 5 நபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். யோகி குழுவிலிருந்து ஒரு குடும்பமும், மாஷா குழுவிலிருந்து 4 குடும்பங்களும் நமது ஊழியத்தின் தொடர்பாளர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். அசுத்த ஆவியின் பிடியிலிருந்து சாம்ராஜ் விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு செவிகொடுத்த பேபிதேவி, மகேந்தர், ராம்பால், தர்ஷன் தேவி ஆகியோர் பிறரும் இரட்சிக்கப்பட; சஞ்சீவ்குமார் குடும்பம் கர்த்தரை ஏற்றுக்கொண்டதின்மூலம் சாமார் மற்றும் மாஷா குழுக்கள் முழுவது மாகக் கர்த்தரிடத்தில் திரும்ப; ஓராண்டாக கண்பார்வை குறைவினால் அவதிப்படும் பிரபு தயாளும், நடக்க முடியாமல் ஊனமாயுள்ள சஞ்சீவ்குமார் தயா ஆகியோர் குணமடைய ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ஆனி:

### ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** 10 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்ததால் 250 மக்கள் தேவ அன்பினால் தொடப்பட்டார்கள். 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது. சுவிசேஷ ஊழியத்தின் பாதையில் ஏற்பட்ட விபத்திலிருந்து நமது ஊழியர் பாதுகாக்கப்பட்டதற்காக. ஜீப் ஊழியங்களின் மூலம் 10 புதிய கிராமங்கள் சந்திக்கப்பட்டதற்காக. மாநில ஊழியர்களுக்காக நடத்தப்பட்ட ஒருவாரப் பயிற்சிகள் வெற்றிகரமாக நடந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கம்லா, தான்பகதூர், ரோகித் மற்றும் பிம்லா குடும்பத்தார் ஆண்டவரை ஏற்றுக் கொண்டதால் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; சுக்முதேவி கர்ப்பப்பைப் புற்று நோயிலிருந்து சுகமாக்கப்பட; 10 புதிய கிராமங்களில் விசுவாசிகள் எழுப்பப்பட; புதிதாக சந்திக்கப்பட்ட 6 புதிய குடும்பங்கள் இயேசுவின் மீதுள்ள தங்கள் நம்பிக்கையை துணிவுடன் அறிக்கையிட; சுவாவை பகுதிகளில் புதிய ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## 2 ஆகஸ்ட்
புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. தவ்ங் கான் கப் P.
திருமதி. குமாரி பாரதி பாருட் பிரதாப்

### கர்சோக்:
**பவன் குமார் & பிரபாஷினி தேவி**

**துதிக்க:** சென்னையில் நடந்த அர்ப்பணிப்பின் ஆராதனையில் ஊழியர்கள் வந்து பங்குபெற்று பத்திர மாகத் தங்கள் இருப்பிடங்களுக்கு சென்றதற்காக. வெளிப்புற ஊழியங் களும், இரவுக் கூடுகைகளும் எந்தவித தடையுமின்றி சிறப்பாக நடந்ததற்காக. பணித்தளத்தில் ஏற்படும் குழப்பங்களைச் சந்திக்க வக்கீல்களின் மூலம் கொடுக்கப்பட்ட சட்டப்பூர்வமான அறிவுரைகள் ஊழியர்களை ஊக்கப் படுத்தியதற்காக. கிலோதார் கர்சோக் கிராமத்தில் புதிதாக சந்திக்கப்பட்ட நேப்பாளி குடும்பத்திற்காக. தன் வீட்டை ஆராதனைக்குத் திறந்துக் கொடுத்த சகோதரி சுவப்னாவிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பரான அஞ்சலி சகோதரி தன் கணவனை இழந்தபோதிலும் சபை மக்களுக்காக விசுவாசத்தில் உறுதியுடனிருந்து ஊழியம் செய்ய; பசந்பூர் சபை விசுவாசிகள் எந்த விதத்திலும் சோர்ந்து போகாமல் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, ஒருமனப்பட்டு தேவனை ஆராதிக்க ஜெபிப்போம்.

### ரோஹ்ரு:
**ஜாண்சன் சங்கர் & ஜெபராணி**

**துதிக்க:** சுவிசேஷத்தைக் கேட்ட 310 பேரில் 4 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்து தேவ மந்தையில் இணைந்துள்ளனர். நமது விசுவாசிகளில் சோனியா என்ற சகோதரி பல் மருத்துவப் படிப்புக்கு தெரிந்தெடுக்கப்பட்டதற்காக; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்த சாகர் மனந்திரும்பி மீண்டும் ஆராதனையில் பங்குபெறுவதற்காக; ரனால், லிம்ரா, சௌரா மற்றும் டையூனி கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி நல்ல முறையில் நடந்ததற்காக; பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட சகோதரி சிம்ரனுக்காக; ரோஷன்லால் என்ற சகோதரர் சந்தித்த விபத்தில் சிறிய காயங்களுடன் தேவ கிருபையால் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ எதிர்ப்பாளர் களால் துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர் களுக்காகவும் தவறான காரணத்தைப் பரப்பும் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பவும்; டோனாவூரில் படிக்கும் என்குழந்தையின் சுகத்திற்காக; கடன் பிரச்சினையிலிருந்து சுனில் விடுவிக்கப்பட; இருதய வேதனை யிலிருந்து சந்தோஷ் சுகமடைய; பக்கவாத நோயிலிருந்து அகன்ஷா சுகம் பெற மற்றும் 12 வயது சஞ்சனா பத்து மாதம் சிகிச்சைப்பெற்றும் நடக்க முடியாமல் படும் வேதனையிலிருந்து பாதுகாக்கப்பட; தேவ ஆசீர்வாதத்தினாலும் வழிநடத்துதலினாலும் 60 கிராமங்கள் சந்திக்கப்படவும், 80 ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தவும், நமது சபை மக்கள் வேத வசனத்தில் ஆழமாக வேரூன்றி கனிதரவும் ஜெபிப்போம்.

**3**
**ஆகஸ்ட்**
**வியாழன்**

# பஞ்சாப்

## அஹ்மத்கட் மண்டி:

**சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால்**

**துதிக்க:** இப்பணித்தளத்தில் முதல் முறையாக சுவிசேஷத்தைக் கேட்ட 720 மக்களுக்காக. 45 புதிய ஏற்பாடுகள் மக்களிடம் பகிரப்பட்டதற்காக. ஒருவர் விசுவாசியாகி தேவ மந்தையில் இணைந்ததற்காக. 2 கிராமங்களில் இயேசு திரைப்படத்தைப் பார்த்த 130 புதிய மக்களுக்காக. விடுமுறை வேதாகமப்பள்ளிப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டப் பயிற்சிகளுக்காக. தவறாமல் நல்ல முறையில் நடந்து வரும் வாலிப ஆண்கள் பெண்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்காக. இந்த குழுக்கள் ஆவிக்குரிய ஊட்டச்சத்துக்கு உதவியாக இருப்பதற்காக. ராதா என்ற ஜெபக்குழு 12 பேர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருவதற்காக. லூதியானாவிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட என்னை ஆண்டவர் மூச்சுத்திணறலிலிருந்து சுகப்படுத்தியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு திரைப்படம் மற்றும் கிராம ஊழியங்களின் மூலமாக 1000 புதிய ஆத்துமாக்களை சந்திக்கவேண்டும் என்ற எண்ணம் நிறைவேற; சத்சங் ஊழியங்களின் மூலமாக மக்களின் இருதயக்கதவுகள் திறக்கப்பட்டு, விசுவாசத்தில் வளர; நடக்க முடியாமல் மாதக்கணக்காக அவதியுறும் நமது சபை விசுவாசி மனிசாகௌர் சுகமடைவதற்காக; சிறுநீரகக்கல்லினால் வேதனைப்படும் சுக்காசிங், மகிந்தர்சிங், சாஜன், அசோக்குமார் ஆகியோர் சுகமாக்கப்பட ஜெபிப்போம்.

## பர்னாலா:

**பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின், தீப்திலால் மாலி & ரேணுமா**

**துதிக்க:** இரட்சிக்கப்பட்டு இயேசுவின் மந்தைக்குள் இணைந்த 12 ஆத்துமாக்களுக்காக. இயேசுத்திரைப்படம், சத்சங் மற்றும் வெளிப்புற சந்திப்பின் ஊழியங்களின் மூலமாக 850 மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டதற்காக. குடலிறக்க வியாதியிலிருந்து அற்புதமாக சுகமடைந்த சகோதரி சுனித்தா விசுவாசதிற்குள் வந்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியில் சிக்கித் தவிக்கும் 12 வயது இளம் பெண் ஜாஸ்மின் விடுவிக்கப்பட; சிறுநீரகக்கல்லினால் அவதிப்படும் ராஜ்கௌர் சுகமடைய; அம்ரித்சிங்கின் குடும்பத்தார் ஆலய ஆராதனையில் பங்குபெற; விடுமுறை வேதாகமப்பள்ளியில் பங்குபெற்ற 216 பிள்ளைகள் இயேசுகிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்து தங்கள் விசுவாசத்தில் வளர; இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் கிரன்ஜீட் பரிபூரண சுகமடைய; புற்றுநோயிலிருந்து மருத்துவ உதவியால் சுகமடைய காத்திருக்கும் சுமன்கௌர் சுகமடைய; இருதயக்கோளாறிலிருந்து பீர்பில் கௌர் சுகமடைய ஜெபிப்போம்.

4
ஆகஸ்ட்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மங்கையர்க்கரசி பெஞ்சமின்
திருமதி. சுவிலா ஞானப்பூ டேனியல்

## புத்லாடா:

### ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** 1000 பேர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில், 7 பேர் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் மந்தையில் இணைந்ததற்காக. புத்லாடா சபையில் மூன்று நாட்கள் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளியில் ஆண்டவரை அறியாத 150 குழந்தைகள் பங்குபெற்று தேவ வார்த்தையினால் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக; சாத்தானின் பிடியிலிருந்து முகங்கான்கௌர் மற்றும் உஷா விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட புதிய கிராமங்களில் தேவன் திறந்த வாசலைக்கொடுக்க; புற்றுநோயினால் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் தர்ஷன் மற்றும் சரன்தாஸ் தேவ கிருபையால் சுகமாக்கப்பட; விவசாயம் செய்யும் நமது விசுவாசிகளின் நிலங்கள் மிகுந்த பலன்களைக் கொடுக்க, தேவனின் ஆசீர்வாதம் கிடைக்க; முங்கன் குடும்பத்தைத் தேவன் குழந்தைச்செல்வத்தால் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## லேஹ்ரகாகா:

### ஐசக் ஆபேல் & அன்னா ரோஸ்லின்

**துதிக்க:** சத்சங் ஊழியத்தின் மூலம் 850 பேர் தேவ வசனத்தைக் கேட்டதற்காக. 4 பேர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவமந்தையில் இணைந்ததற்காக. நமது பணித்தளத்தின் 6 இடங்களில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளிகளில் அநேக பிள்ளைகள் பங்குபெற்று இயேசுவை தங்கள் வாழ்க்கையில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக. புதிய கிராமங்களான பாத்ரன், சோட்டியான், மோஜோலால் ஆகியவற்றிலுள்ள 6 புதிய குடும்பங்களைச் சந்தித்து வழிநடத்தியதற்காக. வாலிபப்பிள்ளைகள் ஊழியத்தில் பங்குபெறுவதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சந்திக்கப்பட்ட கிராமங்களில் ஊழியப்பின்தொடர் பணிகள் நல்ல முறையில் நடக்க; புதிய விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் வளர; நமது ஆலய ஆண்டுவிழா ஜுலை மாதத்தில் கொண்டாடப்பட்டது மேலும் ஆவிக்குரியக் கூட்டங்கள் 3 நாட்கள் நடந்தது, அதில் பங்குபெற்றவர்கள் ஆவியின் கனிகளைக் கொடுக்க; நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்காக; சல்பஞ்சாரா மற்றும் பூட்டாசிங் வாலா கிராமங்களில் சத்சங் ஊழியங்களுக்காக அப்பகுதியில் தேவன் திறந்த வாசலைக்கொடுக்க; இந்த கிராமங்களில் இருக்கும் மக்களின் இருதயத்தை தேவன் திறந்து அவர்கள் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## 5 ஆகஸ்ட்

சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோத்ஸ்னா தேவி பிரசாந்த்
திருமதி. மேஷ்ராம் கல்பனா வால்வி நேதாஜி

### மான்சா:

### தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** 1500 புதிய மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டதற்காக மற்றும் 5 புதிய கிராமங்கள் வேதவசனங்களால் சந்திக்கப்பட்டதற்காக; 10 பேர் வெளிப்படையாக இயேசுவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிவித்த தற்காக; 140 பிள்ளைகள் விடுமுறை வேதாகமப்பள்ளியில் கலந்து கொண்ட தற்காக மேலும் விசுவாசிகளல்லாத 45 பிள்ளைகள் பங்குபெற்று வேத வசனங்களால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டதற்காக. ஒருவருட இடை வெளிக்குப்பின் மாந்தர்மா கிராமத்தில் சத்சங் கூடுகை நடத்தப்பட்டதற்காகவும், 40 புதிய ஆத்துமாக்கள் சுவிசேஷத்தை முதல் முறையாக கேட்டதற்காகவும்; அசோம்ஜோட் என்ற குழந்தை விஷம் கலந்த விதைகளை சாப்பிட்டும் தேவ கிருபையால் அற்புதமாக பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்திக்கப்படாத ஜாய்னா மற்றும் சாந்துளி கிராமங்களில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கும் 2 சத்சங் கூடுகைகள் நடத்தப்பட்டு அதன்மூலம் அநேகர் இயேசுவை தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு விசுவாசிகளாக மாற; நமது அநேக விசுவாசிகள் விவசாய தொழில் செய்கிறார்கள். தேவன் அவர்களின் முயற்சியை ஊக்கப்படுத்தி அமோக விளைச்சலைக் காண; அசுத்த ஆவியினால் பிடிப்பட்டிருக்கும் அன்மோல், கிர்மா, மன்ப்ரீத் விடுவிக்கப்பட; 35 வயதான நகோகி என்றவர் தேவ ஆவியால் பெலப்படுத்தப்பட்டு நன்றாக நடக்க ஜெபிப்போம்.

## ஹரியானா

### பர்வாலா:

### மிண்டு குட்டும் & சுப்ராபாக்

**துதிக்க:** தேவன் ஒரு கிராமத்தில் திறந்த வாசலைத் தந்து 125 பேருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கிருபை செய்தார். இம்மக்கள் முதல்முறையாக இயேசுவைப்பற்றி அறிந்தார்கள். இவர்களில் 4 பேர் விசுவாசிகளாக மாறி இயேசுவின் மந்தையில் இணைந்தனர்; 5 வேதாகமங்கள் மக்களிடையே கொடுக்கப் பட்டது; ஆதாம்பூர் என்ற இடத்தில் பிள்ளைகளுக்கான வேதாகமப்பள்ளிகள் நடத்தப்பட்டன. இதில் 20 குழந்தைகள் தவறாமல் கலந்துகொள்கிறார்கள்; போலி என்ற விசுவாசி முதுகுதண்டுவடப் பிரச்சினையினால் அவதிப்பட்டவர்; மருத்துவ அறுவை சிகிட்சையினால் சுகத்தைப் பெற்றுக்கொண்டார்; நன்றாக பயிர் விளைவதற்கு ஏற்ற மழையை தந்து தேவன் ஆசீர்வதித்ததற்காக; முனிஷ் மற்றும் இவரது மகன் இருவரும் பெரிய விபத்திலிருந்து தேவனால் அற்புதமாக காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சானியானா சபை மக்களுக்காக எந்தவித எதிர்ப்புமின்றி ஒரு ஆலயம் கட்டப்பட; அநேக சபை மூப்பர்கள் மதுவிற்கும், போதை வஸ்துவிற்கும் அடிமையாகி இருக்கிறார்கள். தேவன் இவர்களை இந்த பழக்கத்திலிருந்து விடுவித்து காப்பாற்றி சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் டாரோலி, அதாம்பூர் கோன், கொர்ம்பூர், கோக்லி, சதால்பூர், மோகபத்பூர், சிச்லால், காராபர்வாலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைய தேவன் திறந்த வாசலைத் தர ஜெபிப்போம்.

# 6 ஆகஸ்ட்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுதாராணிபாய் ரவி

## கலான்வாலி:
**விஜயகுமார் & ஜெபலா**

**துதிக்க:** 155 பிள்ளைகள் விடுமுறை வேதாகமப்பள்ளிகளில் பங்குபெற்று இயேசுவை அறிந்து கொண்டதற்காக; ஆசீர் கிராமத்தில் ஊக்கமான ஜெபத்தாலும், ஊர் தலைவரின் ஈடுபாட்டினாலும் பாபா என்பவர் ஒரு கோவில் கட்ட இருந்த எண்ணத்திலிருந்து மாற்றப்பட்டு அந்த இடத்தை விற்றுவிட்டார். மகந்தேரா கௌர் என்பவரின் வீட்டுக் கூரை இடிந்து விழுந்தபோதும் எந்தபாதிப்புமின்றி தேவன் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேதாகம வகுப்புகளில் வாலிபர்கள் பங்குபெற்று பயனடைய; குர்தீப் கௌர் மற்றும் சுக்லா வலிப்பு நோயிலிருந்தும், ஆசீர் கிராமத்திலுள்ள கிருஷ்ணாவிற்கு தலையிலுள்ள சீழ் குணமடைய; மன்னாட் என்ற 6 வயது குழந்தை காது கேளாமை மற்றும் ஊமைத்தன்மையிலிருந்து சுகம் பெற்று கேட்கவும், பேசவும் ஆரம்பிக்க ஜெபிப்போம்.

## ஃபத்தேஹ்பாத்:
**டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்**

**துதிக்க:** ஒரு கிராமத்தில் 230 பேர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 2 வேதாகமங்களும், 10 புதிய ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன. 12 சத்சங் கூடுகைகள், 5 பெண்கள் கூடுகைகள் நடத்தப்பட்டன. மதானா, கசும்பி, ஜான்சல், பட்டிதாபார், தரியாபூர், ஹன்ஸ் காலனி மற்றும் அசோக் நகரில் விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகள் நடைபெற்றன. 280 சிறுவர்கள் பங்குபெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். ஞாயிறு ஆராதனைகளில் பங்கேற்கும் மித்து மற்றும் சுனில் குடும்பங்களுக்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜித்புரா கிராமத்தைச் சேர்ந்த நிர்மலா மற்றும் சுந்தர் குடும்பங்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ள; சந்தீப் மற்றும் அவரது மனைவி மகேந்தர் அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட; நற்செய்திக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மல்கீத், அசோக் மற்றும் ராஜேஷ் ஆகியோர் தங்கள் எதிர்ப்பைக் கைவிட்டு கர்த்தரின் அன்பினால் தொடப்பட; செவிகேளாமை பிரச்சினையினால் கஷ்டப்படும் வினோத் கர்த்தரிடமிருந்து சுகம் பெற; பீர்கனா கவுத்லியாம் ஜாகரன்கள், குருத்துவாராக்கள், மந்திரவாதிகள், ராதாஸ்வாமி சத்சங்குகள், சச்சா கௌதா மற்றும் ரம்பால் பொய்ப்போதனைகள் ஆகிய கட்டுகளிலிருந்து இப்பணித்தள மக்கள் விடுவிக்கப்பட; பல்ஜிந்தர் சிங் ஊழியத்தின் கள்ளப்போதகர்களின் தீயப்பழக்கங்களிலிருந்தும், சுகமளிக்கும் எண்ணெய் மற்றும் தண்ணீர், போதகரின் சட்டை மற்றும் கைக்குட்டையைத் தொடுதல் போன்ற நிகழ்வுகளிலிருந்து மக்களும் விசுவாசிகளும் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

7
ஆகஸ்ட்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. மோசஸ் முரளிதரன் S.
செல்வி. ஆர்த்தி

# உத்தராகண்ட்

## நானக்மட்டா:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** 200 மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக, 4 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டதற்காக; ஒரு வேதாகமம் மற்றும் 23 புதிய ஏற்பாடுகள் மக்களிடையே பகிரப்பட்டது. 8 வீட்டு ஜெபக்கூடுகை, 12 சத்சங்கூடுகைகள், 5 விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகள் மற்றும் 2 பெண்கள் கூடுகைகள் நடத்தப்பட்டதற்காக; சத்வீர் சிங் இரத்தத் தொற்றிலிருந்து ஜெபத்தால் சுகம் பெற்றதற்காக, பூரன்சிங்கின் ஜெபத் திற்குப் பின் தேவன் அவருக்கு ஒரு ட்ராக்டர் வாங்க கிருபை செய்ததற்காக, பீரோகோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றதற்காக மற்றும் குழந்தை மன்னாட்டு சுவாசக்கோளாறிலிருந்து விடுதலைப் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹர்டாஸ்பூர் கிராமத்திலுள்ள ரஜ்னி இரட்சிக்கப்பட; ரீனா மற்றும் குர்தேவ் சிங்கின் முழு குடும்பமும் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; புதிய தொடர்பாளர்களான ட்ரையோக் குடும்பத்தினர் மற்றும் ராஜுவிந்தர் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட; குல்தீப் சிங்கின் சிறுநீரக வீக்கத்திலிருந்தும், அதிக இரத்த அழுத்தத்திலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## கேர்வாடா:

**போயா தேவுபாய் & ஜாமுபேன்**

**துதிக்க:** 4 கிராமங்களிலுள்ள 420 மக்கள் சுவிசேஷத்தை முதல்முறையாக கேட்டனர். 48 பேர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டதற்காக; சாக்கல் கிராமத்தி லுள்ள புதிய சபை மக்களுக்காகவும், தேடுவோர் முகாம், குழந்தைகளுக்கான முகாம், விசுவாசிகளுக்கான முகாம்கள் அனைத்தும் எந்தவித இடையூறுமின்றி நடந்ததற்காக இதன் மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றதற்காக, அமிதாபேன் மற்றும் சுமித்ராபேன் இருவரின் நுரையீரலிலுள்ளப் பிரச்சினை நீங்கியதற்காக, பிசாசின் தொந்தரவினால் அவதிப்பட்டு வந்த அஜுன் விடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் சொந்த கிராமத்திலே எதிர்ப்புகளைச் சந்திக்கும் நமது விசுவாசிகளுக்காகவும், இவர்கள் தங்கள் விசுவாசத்திலே உறுதியாக இருக்கவும், அசுத்த ஆவியினால் தன் பார்வையை இழந்திருக்கும் லலிதா சுகமடைய;சில கிராமங்களிலிருக்கும் சகோதரர்கள் தங்கள் சமுதாயத்தினர் தங்களை தள்ளிவைத்துவிடுவார்களோ என்ற பயத்தில் நமது ஆராதனையில் கலந்துக்கொள்ள பயப்படுகிறவர்களின் பயம் நீங்க ஜெபிப்போம்.

8
ஆகஸ்ட்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆண்ட்ரூஸ் ஜவஹர்
திருமதி. ஹெப்சிபா ஆண்ட்ரூஸ்
திருமதி. மஹாலா ஷீலாபேன் பத்வி சோமாலியா

## சாங்ரியா:

## செல்வம் தவமணி & ஹெப்சி

**துதிக்க:** நமது விசுவாசியான கெர்பிரீத் கௌருக்கு நமது விசுவாசக் குடும்பத்திலிருந்து கிடைத்த வாழ்க்கைத் துணைக்காக; சுக்தேவ் சிங் தனக்கென ஒரு சொந்த வீட்டைக் கட்டியதற்காக, நமது சபை மூப்பரின் மகனான அஜய் தனது 12-வது வகுப்பில் வெற்றி பெற்று வேதாகமக்கல்லூரியில் இணைந்து படிக்க தீர்மானித்ததற்காக; சுக்தீப் சிங் என்ற சிறுவன் தேவனின் இரக்கத்தால் நல்ல சுகத்தைப் பெற்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளரான லக்கிந்தர் கௌரும் அவரது குடும்பத்தார்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க, இவர்கள் தங்கள் விசுவாசத்தில் வளருவதற்காகவும்; விசுவாசத்தில் பின் மாற்றமடைந்துள்ள ஜஷ்விந்தர் குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்து ஆலய ஆராதனைகளில் பங்குபெற; நெஞ்சு வலியினால் அவதிப்படும் சுக்பிரீத் கௌர் தேவ கிருபையால் சுகத்தைப் பெற; சாங்ரியா பணித்தளத்தில் சுவிசேஷம் அறிவிப்பதின் மூலம் அங்குள்ள அசுத்த ஆவிகளின் சீற்றம் அடங்க ஜெபிப்போம்.

## உதய்பூர்:

## ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** 140 புதிய மக்கள் முதன் முறையாக சுவிசேஷத்தைக் கேட்டதற்காக, ஒருவர் விசுவாசியாகி இயேசுவின் மந்தையில் இணைந்ததற்காக, 105 குழந்தைகள் விடுமுறை வேதாகமப்பள்ளியில் இணைந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றதற்காக, 2 வயது மாகாக் என்ற குழந்தை சுயநினைவை இழந்து மரித்துவிட்டதாக எண்ணிய பொழுது ஜெபத்தின்மூலம் உயிர் பெற்றதற்காக; ராமு துர்காபாய் ஆகியோர் ஜெபத்தின்மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப்பெற்றதற்காக, நமது விசுவாசக் குடும்பத்தில் 32 பிள்ளைகள் தங்கள் பள்ளித் தேர்வை நன்றாக எழுதி நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பணித்தளத்திலிருக்கும் பீல் இனமக்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்து புறமதத்தினரின் எதிர்ப்பை எதிர்கொள்ளவும்; தன் மகனை இழந்திருக்கும் நமது விசுவாசியான குரிலால் குடும்பத்தினர் ஆறுதலடைந்து விசுவாசத்தில் உறுதியாயிருக்கவும்; ஷர்மிளா மற்றும் பாரு இருவருக்கும் சுகப்பிரசவம் நடக்க; பத்ரானா, நாயக் கெய்தா மற்றும் அல் ஷாகர்த் கிராமங்களில் நடத்தப்படும் வெள்ளிக்கிழமை ஆராதனைகளில் அநேகர் கலந்துக்கொண்டு பயனடைய ஜெபிப்போம்.

**9**

**ஆகஸ்ட்**

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோஷஃபின் ஷீபா ஜீவானந்தன்

## சாம்ரானியா:

### மீனுகா அடப்பா மேத்யூ & ராம்புரம் பெடாக்கா ஆஷா

**துதிக்க:** புதிதாக சுவிசேஷத்தைக் கேட்ட 450 பேருக்காக, 35 புதிய ஏற்பாடுகள் இவர்களுக்குள் பரிமாரப்பட்டதற்காக; லுக்காரி கிராமத்தில் நடந்த சபை மூப்பர்களுக்கானக் கூட்டத்தில் 14 பேர் பங்குபெற்றதற்காக; விக்ரம் மற்றும் சுக்ரம் சகோதரர்களுக்கு நல்ல வாழ்க்கைத்துணைவிகள் கிடைத்த தற்காக; விடுமுறை வேதாகமப்பள்ளி நடத்த ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டப் பயிற்சிக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லுக்காரி சபையில் அதிக எண்ணிக்கையில் ஆத்துமாக்கள் இணைந்து வளர்ச்சியடைவதால், இடப்பற்றாக்குறை நீங்கி சபை விரிவாக்கப்பட; நமது விசுவாசிகளான பலாராமும், கைலாஷும் தங்களை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து ஊழியர் களாக இணைய; ராஜ்கீடா மற்றும் சிக்காரி கிராமங்களில் தண்ணீர் குழாய்கள் நிறுவப்பட ஊர் தலைவர்கள் லஞ்சம் பெறாமல் மக்களுக்கு நன்மை செய்ய; கோரி சபை மக்கள் ஆவிக்குரிய வாழ்விலும், வளர்ச்சியடைய; சுவாடார் மற்றும் கிரிஷாங்காக் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கொடுக்க ஜெபிப்போம்.

## அல்வார் விடுதி:

### பங்காரு நாயுடு கர்ரி & ஈமண்டி அனுராதா

**துதிக்க:** துர்கா காலனியில் ஒரு புதிய பகுதி யில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஜாதவ் சமுதாயத்திற்கு கௌதம் குடும்பத்தின் வாயிலாக நற்செய்தி அறிவிக்கத் திறந்த வாசலை கர்த்தர் அருளியதற்காக; காந்திகா மற்றும் தில்பாடா கிராமங்களில் கடுமை யான எதிர்ப்புகளின் மத்தியிலும் சில விசுவாசிகள் கர்த்தரின் மேல் உறுதியாக உள்ளனர். உபவாச ஜெபத்தின் வாயிலாக, பெண் விசுவாசிகளை அவதூறாகப் பேசிய கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களின் எதிர்ப்புகள் நிறுத்தப்பட்டதற்காக; வேதாகம வகுப்பில் பங்குப் பெற்றதின் வாயிலாக அனில் மதுப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, குடும்பத்துடன் ஆராதனையில் பங்கேற் பதற்காக; நற்செய்தி குழு புதிய கிராமங் களில் நற்செய்தி அறிவிக்கக் கர்த்தர் திறந்த வாசலைக் கொடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட்டோர் விசுவாச வாழ்வில் உறுதியாயிருக்க; தங்கள் வீடுகளில் மதுவை உற்பத்திசெய்வதன் மூலம் பல வாலிபர்கள் பாதிக்கப்படுகின்றனர் இந்நிலையில், ராய்சீக் மக்கள் மதுவை உற்பத்தி செய்வதை நிறுத்த; பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள மஜ்பிசீக் மத்தியில் கர்த்தர் மனந்திரும்புதலை உண்டாக்க; எதிர்நோக்கியுள்ள காந்திகாமா கிராமத்தைச் சார்ந்த புதிய விசுவாசிகளான ராதா, பபிதா, ஆஷா, பூனம் மற்றும் பாலோ ஆகியோர் ஆலய ஆராதனையில் பங்குபெறமுடியாத நிலை மாற; ஆலயக்கட்டுமானத்திற்கென நிலத்தை நன்கொடையாகத் தருவதாக வாக்களித்துள்ள ஜெய்ராம் தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்க ஜெபிப்போம்.

**10 ஆகஸ்ட்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சன்மதா மனோகர் தானே
திரு. ஓம்பிரகாஷ்

# உத்தரப் பிரதேசம்

## டூண்ட்லா:

### பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** 250 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 2 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 10 புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. 5 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நிறைவேற்றப்பட்டது. தனுமாய் மற்றும் நாகலகலியார் கிராமங்களில் விசுவாசிகளுக்கான முகாம்கள் நடத்தப்பட்டன. 2 இடங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளிகளின் வாயிலாக 61 சிறுவர்கள் கர்த்தரின் வார்த்தையை ஆவலோடு பெற்றுக்கொள்ள கிருபைச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சன்சய், பரத்சிங் மற்றும் ராஜ்குமார் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; திட்டமிட்டப்படி இரவுக் கூடுகைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட; துண்ட்லா, நாகலகலியான் மற்றும் தனுமாய் கிராமங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகைகளில் பங்குபெற்றோர் கர்த்தரை ஏற்றுக்கொள்ள; ஜஸ்ரானா பகுதியில் நடத்தப்படும் ஊழியங்கள் வெற்றிகர மாக, சிறந்த கனிகளைக் கொடுக்க ஜெபிப்போம்.

## கைம்கஞ்ச்:

### எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி

**துதிக்க:** தேவ கிருபையால் 8 வயது பாலாக் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக; ஊழியர் குடும்பம் வீடு திரும்புகையில் ஏற்பட்ட வாகன விபத்திலிருந்து தேவன் எங்களை பாதுகாத்ததற்காக; கைமாஸ் பணித்தளத்தில் முதியோர் பயிற்சி முகாம் நல்ல முறையில் நடந்ததற்காக; இடி மழை இருந்தாலும் அஜாம்பூர், மஜ்ஜோலா, பக்லோபூர், ஜிப்பூர்வா பத்தேபூர் ஆகிய கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி நடந்ததற்காக; சாட்டென்த் நமது விசுவாசிக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் வேலை கிடைத்ததற்காகவும், அங்கு அவர் தனது சக நண்பர்களுக்கு சுவிசேஷத்தை பகிர்ந்து கொண்டதற்காகவும், படுத்த படுக்கையாக கிடக்கும் தனது சகோதரி ரிங்கிக்காக நமது விசுவாசி ஜெபித்தபோது தேவன் அவர்களை சுகப்படுத்தி யதால் இவரது விசுவாசம் இன்னும் பலப்படுத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 3 ஆண்டுகளாக சாத்தானின் பிடிக்குள் சிக்கியிருக்கும் சையாம் குமாருக்கு விடுதலைக் கிடைக்க; லக்ஷ்மி மந்திரத்தால் பீடிக்கப்பட்டு தன் கணவரையும் குழந்தையையும் விட்டு பிரிந்திருக்கிறார். தேவன் இவர் களுக்கு சமாதானத்தைக் கொடுத்து மீண்டும் இணைந்து வாழ; நமது வாலிபர் களுக்கு நல்ல வேலை கிடைக்கவும்; இளம் விசுவாசிகளுக்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 11 ஆகஸ்ட் வெள்ளி

### காட்டம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** 2 ஆத்துமாக்கள் புதிதாக இணைந்ததற்காக, 17 இடங்களில் பின்தொடர் ஊழியங்கள் நடந்தன; சுலேக்கா, அனிதா பிரதாப் குடும்பங்களில் இருந்த குழப்பமான சூழ்நிலை சமாதானமாக மாற்றப்பட்டதற்காக; செல்லி சபை மக்களும், ஜெகநாபாத் மக்களும் உபவாச ஜெபங்களில் கலந்துக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளின் கூட்டங்களை நடத்தும் நமது சுதேச ஊழியர் ஊக்கத்துடன் நடத்த, விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்களில் உதவி செய்யும் நிஷா மற்றும் நித்தி இருவரும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட; காட்டாம்பூர் மற்றும் பவான் சபைகளில் நடத்தப்படும் உபவாச ஜெபங்களுக்கு எந்தவித எதிர்ப்புமில்லாமல் நடக்க; இப்பகுதியிலுள்ள எதிர்ப்புகள் ஒரு முடிவுக்கு வரவும், ரோகினி பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப்பெறவும் ஜெபிப்போம்.

### கோண்டா சிறுவர் விடுதி: ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** நட் மக்களினத்திலிருந்து அநேகர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகவும் இவர்களுக்கு உதவி செய்த உறவினர்களுக்காகவும், சில கிராமங்களில் நடந்த விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகளுக்கும், முதியவர்களுக்கான ஜெபக்கூட்டமும் நடத்துவதற்கு தேவன் கிருபை செய்ததற்காக; நமது விடுதிப்பிள்ளைகளுக்கு ரெயில்வே சாரதர் இயக்கம் உதவி செய்து நடத்தி வந்ததற்காக, இதன் மூலம் பிள்ளைகள் பயனடைவதற்காக, இராணுவத்தேர்வில் நமது விடுதிப்பிள்ளையான கேத்தன் வெற்றிப்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிக்கு வந்திருக்கும் நமது பிள்ளைகள் நன்றாகப்படிக்க, நமது விடுதிக்கான இடத்தி லுள்ள குழப்பங்கள் தேவ கிருபையால் நீக்கப்பட்டு அந்த இடம் நமது விடுதிக்குச் சொந்தமாக்கப்பட, நமது பணித்தள கிராமங்களில் சொல்லப்படும் சுவிசேஷத்தை மக்கள் கேட்டு இயேசுவின் அன்பை உணர; பள்ளிப்படிப்பை முடித்த நமது விடுதிப்பிள்ளைகள் சரியானப்பாடங்களைத் தெரிந்தெடுத்து கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### பாக்லி & உதய்நகர்: டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** அத்தோஸ்நகரில் 2 நாட்கள் உபவாச ஜெபமும், டாங்ரேகாடா கிராமத்தில் முழு இரவு ஜெபமும் நல்லமுறையில் நடைபெற்றது. படக்கதை புத்தகப் பயிற்சியும், வி.சி.சி. பயிற்சியும் காம்நாத் கிராமத்தில் கிரமமாக நடைபெற்றன. விசுவாசத்தில் பின்வாங்கி யிருந்த சுரேஷ் தற்போது தவறாமல் கூட்டத்தில் கலந்துக் கொள்கிறார். பலாசி கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ்பாய் தனது கண் வீக்கத்திலிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்த ஆவியின் பிடியிலிருந்து துல்சிங்பாய், நிர்மலாபேன், ராய்கிபேன் விடுவிக்கப்பட; மூஹாடி கிராமம் குடிபோதை அடிமைத்தனத்திலிருந்தும், சுவிசேஷம் அறிவிப்பதை எதிர்க்கும் சக்தியிலிருந்தும் விடுவிக்கப்பட; ஜனாபானி கிராமத்தில் சுவிசேஷம் பரவவும், அங்கிருக்கும் ஒரே ஒரு நபர் மூலம் ஒரு அறுவடை நடைபெறவும்; தேவ நாம மகிமைக்காக தாகாடி, ஜிக்டி, தலாய் கிராமங்களில் உபத்திரவத்தினிமித்தம் விசுவாசிகள் விசுவாசத்தில் பின்மாற்ற மடையாதிருக்க ஜெபிப்போம்.

## 12 ஆகஸ்ட்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோதி மேரி ஹெலன் மம்குந்தா

திரு. மத்தியாஸ் மால்தோ

### தார்: கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** மூன்று கிராமங்களில் 115 புதிய மக்கள் சுவிசேஷத்திற்கு செவிமடுத்துள்ளனர். 12 நபர்கள் தேவ மந்தையில் இணைந்துள்ளனர். வாடியா கிராமத்தில் புதிய விசுவாசிகளின் கூட்டத்தில் 5 நபர் கலந்துக்கொண்டனர். டாட்டாபானி கிராமத்தில் நடந்த பஜனைக் கூட்டத்தில் 25 நபர் கலந்துக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்காநேர் கிராமத்தில் எதிர்ப்பு தெரிவிக்கின்ற தேர்சிங் இயேசுவின் அன்பினை ருசிக்க; தனது குடும்பத்தினர் கிறிஸ்துவில் வளர பிரேம் சிங் தடைக்கல்லாக இருக்காமலிருக்க; பெண்களுக்கென தொடங்கப்பட்டுள்ள கூடுகைகள் டாட்டாமினி, நயாபுரா மற்றும் போய்ன்டா கிராமங்களில் நல்ல பலனைக் கொடுத்ததற்காக; ஒருவித நாக்கு புற்றுநோயினால் அவதியுறும் எனது தந்தை சுகம் பெறவும், இரட்சிக்கப்படவும்; நடக்கவிருக்கும் ஆராதனைக் கூடுகைகள், விசுவாசிகளை விசுவாசத்தில் பெலப்படுத்துவதற்காக அமைய ஜெபிப்போம்.

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் 900 மக்கள் சுவிசேஷம் கேட்டனர். அதில் 8 நபர்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுள்ளனர். ஒரு சிறுமி ஜோதி தேளினால் கொட்டப்பட்டு சுகமடைந்தாள். பிலாலா மக்கள் கூட்டம் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட டேடோலா, டினோலா கிராமங்களுக்காக. விடுமுறை வேதாகமப் பள்ளியில் 193 நபர்கள் கலந்துக்கொண்டு வேத வசனத்தைக் கேட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் பின்மாற்றமடையாமல் வளர; வாய் புற்றுநோயினால் அவதியுறும் கஸ்தூரிபாய் சுகமடைய; கல்பானி கிராம மக்கள் ஞாயிறு ஆராதனையில் கலந்துக்கொள்ளுவதற்கு தங்களை அர்ப்பணிக்க; அஜீத், லகாடா மற்றும் கமலேஷ் குடும்பங்கள் தங்கள் விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிவிக்க; கத்தோலிக்கப் பின்னணியிலிருக்கும் சிலர் நமது விசுவாசிகளைக் குழப்புகின்றனர். சிவ்ராஜ் காச நோயிலிருந்து சுகம்பெற; மிஷனரி ஷர்மிளாவின் சுகப்பிரசவத்திற்காக ஜெபிப்போம்.

### *யாபேசின் கர்த்தர்!*

*சூரத்தின் முனிசிபால் மாநகராட்சியின் முதன்மை அதிகாரி, பெண்கள் ஜெபக் கூடுகையைத் தடுத்து, ஆலயம் இடிக்கப்படவிருப்பதால் ஆலயத்தைவிட்டு வெளியேறுமாறு கூறினார். ஆராதனைக்காக மாற்றிடம் தேடியும் கிடைக்கவில்லை. 06.06.23 அன்று மாநகராட்சியிலிருந்து வந்து ஆலயத்தை இடித்துத்தள்ளினார்கள். ஆனால் கர்த்தர் அந்த அதிகாரியின் இதயத்தைத் தொட்டார். உங்களுடைய சொந்த நிலத்தில் ஆலயம் கட்டிக்கொள்ள தான் உதவுவதாக அதிகாரி கூறினார். எங்குத்தேடியும் நிலமோ அல்லது அறையோ ஜெபத்திற்காக கிடைக்கவில்லை. கமிஷனர் ஒப்புக்கொண்டால் தானும் உதவுவதாக மேயரும் கூறினார். கமிஷனரை சந்திப்பதற்காக விசுவாசிகள் காத்திருக்கின்றனர். அவர் இருதயத்தை கர்த்தர் தொட்டு நமக்கு ஓர் இடத்தை தந்தருள தேவனிடம் மன்றாடுவோம்.*

**13 ஆகஸ்ட்**

**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானசேகரி ஜாண் டேவிட்

திரு. அசோக் நாயக்

# ஜார்க்கண்ட்

## ஹன்ஸ்டிகா:

### செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** சுவிசேஷ விதை 14 கிராமத்தைச் சேர்ந்த 600 மக்கள் உள்ளங்களில் விதைக்கப்பட்டிருக்கின்றது. ஐந்து நபர் கிறிஸ்துவைத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டுள்ளனர். 150 சிறுவர், சிறுமியர் உள்ளங்களில் சுவிசேஷ விதைகள் 3 இடங்களில் நடந்த விடுமறை வேதாகமப்பள்ளியின் மூலம் விதைக்கப் பட்டுள்ளதற்காக. கிராமத்தின் நபர் ஜால்பே என்பவர் நமது விசுவாசிகளை, பூஜை செய்யும்படி வலியுறுத்தின பொழுது நமது விசுவாசிகள் கிறிஸ்துவுக்காக உறுதியுடன் நின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைப் பகிரங்கமாக அறிவிப்பதற்கு ஆயத்தமாக இருக்கும் நபர்களுக்கு அவ்வப்போது வரும் தடைகள் நீங்க; சர்க்ரா, லூஸியா ஆகிய இருவரும் மனநிலை பாதிப்பிலிருந்து சுகம் பெற; பவுலுஸ் என்ற சுதேச ஊழியர் மற்றுமொரு பணித்தளத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால் மற்றொருவர் வர காத்திருக்கின்ற பணியில் தொய்வு ஏற்படாமலிருக்க; நல்ல மழையினை கர்த்தர் கட்டளையிடுவதினால் விசுவாசிகள் வேலை தேடி மற்ற இடங்களுக்கு புலம்பெயராதிருக்கவும், குடும்பத்துடன் சேர்ந்திருக்கவும். எல்லைகளை விரிவாக்கவும், சரியான சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## பர்ஹர்வா:

### கிரிஷான் குமார் & சாந்திலால்

**துதிக்க:** சத்துருவின் பிடியிலிருந்து விடுதலைப் பெற விரும்பி, பன்லட்டி தேவி தனது மகள் சாவித்ரி தேவியுடன் 6 வருட காலத்திற்கு பின்னர், முதன்முறையாக ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்று வருகிறதற்காக. துலாரி தேவி தெய்வீக சுகத்திற்குப் பின்னர் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இழுப்பு வியாதியிலிருந்து கபூட்டியா சுகமடைய; நமது விசுவாசிகளின் பிள்ளைகள், சுமன், குடியா, லக்ஷ்மி மற்றும் ராகுல் தங்கள் பெற்றோர்க்குக் கீழ்ப்படிய; குமனி கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசிகள் குடிப்பழக்கத்திலிருந்தும், முறைகேடான பழக்கங்களிலிருந்தும் விடுதலைப் பெற; பாபு ப்ரசாத், மதுரவி தாஸ், சக்கியா ராய் & சுதீர் தாஸ், ஞாயிறு ஆராதனைகளில் பங்குபெற; தனது மனைவியை இழந்ததினால் துக்கத்திலிருக்கும் மங்களா ரவி தாஸ் தேவனின் ஆறுதல் பெற; பணிமாற்றம் பெற்று பர்ஹர்வா பணித்தளத்திலிருந்து பத்தர்காமா என்ற புதிய பணித்தளத்திற்கு செல்லவிருக்கும் ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

## 14 ஆகஸ்ட் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சார்லஸ் செல்லகுமார்
திரு. துருபராஜ் பெபர்த்தா
திருமதி. சோஃபியா டேனியல் ராஜாமணி
திருமதி. ஜோதி மால்தோ

### மஹாரோ:
### இம்மானுவேல் கார்த்தி & ஜோதி லக்ஷ்மி

**துதிக்க:** பேகாடா டங்கன் கிராமத்தில் தனது மனைவியை இழந்ததினால் தனது மூன்று பிள்ளைகளையும் வளர்க்கச் சிரமபட்டுக்கொண்டிருந்த வேளையில் நல்லதொரு வாழ்க்கை துணைவியை ஜெபத்தின் மூலம் தேவன் அருளினார். திங்காரா சபையைச் சேர்ந்த தினேஷ் பகாடியா ஞாயிறு ஆராதனையில் கலந்துக்கொள்கிறார். தமுசிங்கா கிராம மூப்பரின் மகள் மால திக்கு தேவன் ஒரு பெண்குழந்தையை அருளியிருக்கின்றார். 19 வயதான முன்னிக்குமார் தேவ ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்துள்ளார். சாப்தகாரா கிராமத்திலுள்ள பன்வாத்தி தேவியை விசுவாசத்திலிருந்து பின்வாங்கக் கட்டாயப்படுத்தினர். அதிகமான ஜெபத்தின் மூலம் எதிர்ப்பு நின்றது. சந்தன்புஜார் கூரையிலிருந்து விழுந்த போதிலும் சேதமின்றி பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மலோட்டிகுமாரியின் சரும வியாதி சுகம்பெற; சுக்லால் பூஜ்ஹாரின் காது கேளாமை நிலையிலிருந்தும், முனிவுமரின் இழுப்பு வியாதியிலிருந்தும் சுகம் பெற; பிரிந்திருக்கும் தேவேந்தரின் குடும்பம் மீண்டும் இணைய; சோல்கட்ரா சபையில் காணப்படும் பிரிவு சரிசெய்யப்பட; பஸ்கினாத் பக்தர்கள் கிறிஸ்து இயேசுவை இரட்சகராக அறிந்துக்கொள்ள; புதிய தொடர்பாளராகிய நிஷித்பூரைச் சேர்ந்த ஹரிஸாகரின் பிரச்சினைகள் தீர்வுக்கு வர ஜெபிப்போம்.

### தல்பும்கட்:
### வகேரா பிரமோத் குமார் & ஐஷோதாபேன்

**துதிக்க:** ஜோன்பௌளனி கிராமத்தில் பார்வதியின் அடக்க ஆராதனை எவ்வித தடையுமின்றி நடைப்பெற்றது. பிரிதான்கோர், திரியா பேடா, பக்ராகோச்சா கிராமங்களில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளியில் அநேக பிள்ளைகள் கலந்துக்கொண்டனர். புக்காய் டுடு என்ற பாகுடி சபையைச் சேர்ந்த மூப்பர் சில காரணங்களால் பின்மாற்றமடைய சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் சில மணிநேர உரையாடலுக்குப் பிறகு விசுவாசத்தில் வலுப்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது தாயாரை இழந்த சோனாராம் டுடு குடும்பம் ஆறுதலடைய; புதிய தொடர்பாளராகிய பாராபகார் ஊரைச் சேர்ந்த லுபின் மார்தி, குல்திய, கிராமத்திலிருந்து சவான் சோரேன், ரகு சோரேன், துமா பேஸ்ரா, துலா சோரேன், ஃபட்டு ஹன்ஸ்தா மற்றும் பாரஜோரி கிராமத்திலிருந்து பூர்னோ மார்டி – இவர்களுக்காக; ஒரு புதிய சுதேச ஊழியர் கிடைக்க பெற ஜெபிப்போம்.

**15 ஆகஸ்ட் செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹெப்சிபா ஆல்பர்ட்
திருமதி. ஜான்சி ராபின்சன்
திருமதி. மேக்தலின் கிரேஸ் ஐசக்
திருமதி. துலந்தி ரியாங் நாபா சிங்

## ஜகன்நாத்பூர்:

**பாசுதேவ் மால்தோ & பசந்தி, ஆபிரகாம் எஸ். & ஆலிஸ் ஷீபா**

**துதிக்க:** 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 31 நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். 90% உள்ளூர் ஆதரவுடன் விடுமுறை வேதாகமப் பள்ளி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றது. புக்காரியா, ஜிர்ஜோர், ராஜபாஸா, பாஸ்கி, ரூவம் என்ற இடங்களில் 1248 மக்களுக்கு சுவிசேஷப் பிரதிகளின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய விசுவாசிகளுக்கும் வாலிபர்களுக்கும் பயிற்சி நன்முறையில் அளிக்கப்பட்டது. ஹரிஷ் லகூரியின் காணாமற்போன எருமை மாடு ஜெபத்தின் விளைவாக ஒரு வாரத்திற் குப்பின் திரும்பி வந்தது. கிராமத்தினர் தண்ணீர் தர மறுத்த நிலைமையிலும், நமது விசுவாசி கிஷோர் பிஸ்குவாவின் திருமணம் இனிதே நடந்து முடிந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்க முடியாதிருக்கும் 42 வயதான சம்பியா நடக்க; பாய்கட்டு கிராமத்தைச் சேர்ந்த சுக்லால் இழுப்பு நோயிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

## தீன்பஹாா்:

**நெகேமியா & அனாமிகா பெகு**

**துதிக்க:** 150 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வறட்சியினால் பாதிக்கப் பட்டிருந்த ஜார்க்கண்டில் ஜெபத்தினால் நல்ல மழை பெய்தது. புலம் பெயர்ந்த பணித்தள விசுவாசிகள் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ள புரிஷ்மாகுமாரி இழந்தப் பார்வையை மீண்டும் பெற; குடும்பப்பிரச்சினையால் பின்மாற்றமடைந்துள்ள மார்கன் முண்டாவும், மண்டு கிஸ்போட்டாவும் மீண்டும் விசுவாசத்திற்குள் வரவும்; சாந்திபாடா விசுவாசத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அவரது கணவர் சுனில் திர்க்கி மனந் திரும்ப; காசநோயிலிருந்து பிலோ ஒராவன் சுகம் பெறவும் ஜெபிப்போம்.

## சுதந்திர இந்தியா!

*இந்தியா 15.08.1947-ல் 200 ஆண்டுக் கால ஆங்கிலேயரின் அடிமைத்தனத்தி லிருந்து விடுதலைப் பெற்றது. எனவே ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்டு 15-ம் தேதியை சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகிறோம். தன்னலமற்ற சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவப்படுத்துமாறு இந்நாள் கொண்டாடப்படுகிறது. இதே நாளில் சுதந்திர இந்தியாவின் 3 வர்ணக்கொடியானது ஏற்றப்பட்டது. இவ்வாண்டும் நாம் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். மதம், ஜாதி, மொழி ஆகியவை நம்மை எவ்விதத் திலும் பிரிக்காமல் இணைந்து இந்நாளை கொண்டாட ஒன்றுக்கூடுகிறோம். புதிய இந்தியாவை உருவாக்க நாம் ஜெபிப்போம். வெளிப்புறமாக நாம் சுதந்திரம் பெற நமது விடுதலை வீரர்கள் போராடினர். இன்று ஆத்துமாவில் கட்டப்பட்டிருக்கும் நமது இந்தியர்களின் விடுதலைக்காக சென்றிருக்கும் நமது ஊழியர்களை நாம் அனுதின ஜெபத்தில் நினைவுக்கூருவோம். சரீரத்திலும், ஆத்துமாவிலும் விடுதலைப் பெற நம் இந்தியர்களுக்காக மன்றாடுவோம்.*

## 16 ஆகஸ்ட்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேரி செபாஸ்டின்

### பெல்டிஹோ:

**ரமேஷ் வேல்ராஜ் & பிரிசில்லாள்**

**துதிக்க:** 65 பேர் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஒன்பதாம் வகுப்பு முதல் கல்லூரி மாணவர்களுக்கென்று தங்கபாரா ஆலயத்தில் இரண்டு நாட்களாக நடைப்பெற்றச் சமுதாய மேம் பாட்டுத் திட்டக் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. 13 கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகள் நடைப்பெற்றன. தங்கப்பாரா ஆலய ஜெபக்குழுத் தலைவனின் மருமகள், கிறிஸ்தவரல்லதவர், அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டார். கோர மண்டல் விரைவு ரயிலில் பயணித்த நமது மிஷனரியை விபத்திலிருந்துக் கர்த்தர் அற்புதமாகக் காத்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இறந்துபோன விசுவாசி லுகான் டுடுவின் மனைவி மனநலம் பாதிக்கப்பட்டவர் மற்றும் குழந்தைகளின் ஆறுதலுக்காகவும், பாதுகாப்பிற்காகவும்; இந்த ஆண்டில் நெல் விளைச்சல் அமோகமாக இருக்க; காலாஜார் நோயிலிருந்து மோனிகா ஹெம்ரோம் சுகம் பெற; சமுதாய மேம்பாட்டுத் திட்ட திலுள்ள சிறுவர்களுக்கு 11–ம் வகுப்பிலும் கல்லூரிகளிலும் இடம் கிடைக்க; சமுதாய மேம்பாட்டுப்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட; தர்ஜோலா மற்றும் ஜிர்லி கிராமங்களில் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் தொடங்க ஜெபிப்போம்.

### சிந்தூரியா:

**பென்ஜமின் ஜோதி & புஷ்பிதா ராணி**

**துதிக்க:** 157 மக்கள் முதன்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டதற்காக, ஒரு வேதாகமம் விநியோகிக்கப்பட்டதற்காக, 7 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நடத்தப்பட்டதற்காக, 2 இடங்களில் இயேசுத்திரைப்படம் திரை யிடப்பட்டதற்காக, 3 பேர் செயின்பூர் கிராமத்தில் நடத்தப்பட்ட சுகமளிக்கும் கூட்டத்தில் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றதற்காக, பன்சியா கிராமத்தில் மோகன்ராய் என்ற புதிய தொடர்பாளர் கிடைக்கப்பெற்றதற்காக, ரே மக்கள் இனத்தவர் மத்தியில் தன்னார்வமாய் ஊழியம் செய்ய இணைந்திருக்கும் பிப்பென் ரேக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பணித்தள ஆய்வு நடத்தப் பட்ட பத்தர்காடா என்ற பகுதியில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைக்க, புதிதாக இப்பணித்தளத்திற்குச் சென்றிருக்கும் நமது ஊழியர்களுக்கு சரியான வீடு அமைய; சஹாதேவ் ரே குடும்பத்தினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; இப்பணித்தளத்திலுள்ள விடுதி சிறுவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியடைய ஜெபிப்போம்.

## 17 ஆகஸ்ட் வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிகய் தியான்சிங் ஜங்கோலுன்

# மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்:

### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** 15 கிராமங்களில் 1000 புதிய மக்கள் சுவிசேஷம் கேட்டனர். அதில் 5 நபர் கிறிஸ்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். சோனேஷ் மின்னதிர் விலிருந்து சுகம்பெற்று சபையில் கலந்துக்கொள்ளுகிறார்; சுஜித் முர்மு கடந்த மாதத்தில் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள தனது விசுவாசத்தை அறிக்கையிட்டார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் ஒருவர் பேருந்திலிருந்து கீழே விழுந்து தனது ஞாபகத்திறனை இழந்துவிட்டார். கிராம விசுவாசிகள் ஒன்றிணைந்து அவருக்காக ஜெபத்ததின் பலனாக அவர் தனது ஞாபக திறனைத் மறுபடியும் பெற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியப்பயன்பாட்டிற்குத் தேவைப்படும் ஓர் எல்.சி.டி. ப்ரொஜெக்டர் கிடைக்கப்பெற; நிமாய் தனது குடும்பத்தில் சமாதானத்தை அனுபவிக்க; விஜய் மற்றும் சுஜோன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; பொம்மன்கோலா கட்டி பகுதியிலுள்ள கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் கிறிஸ்துவின் அன்பினை ருசிக்க; வாலிபர்கள் மற்றும் பெரியவர்களின் எண்ணிக்கை சபையில் அதிகரிக்க ஜெபிப்போம்.

### தபன் & குமார்கன்ஜ்:

### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** 13 நபர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். வெளிப்புற சந்திப்பு, இயேசு திரைப்படம், இரவுநேரக் கூட்டங்கள் வாயிலாக 700 பேர் தேவ மந்தையில் இணைந்தனர். வயல் முழுவதும் தண்ணீரினால் நிரம்பினதால் விளைச்ச லுக்கு ஏற்றதாக இருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மேல் வாஞ்சை காட்டும் புடாகோம், டாவோஸி, மஹிந்தர், டெட்டுல்மோடா, நெகெம்பா, பஞ்சகட்டா, கடாடோலா, ஷயாம்தேர் மற்றும் நுரூல் ஆகியோருக்காக; பஸாபாடா சபையின் விசுவாசிகள் ஆலயம் கட்ட நிலம் தர முன்வர; நுரூல் மக்களே தங்களது முயற்சியினால் ஆலயத்தைக் கட்டி முடிக்க; தங்கள் பாவங்களிலிருந்து விடுபட முடியாம லிருக்கும் சில விசுவாசிகளுக்கு தேவன் உதவிச் செய்ய; கிறிஸ்துவின் சாட்சியாக அனைவரும் வாழ ஜெபிப்போம்.

## இயேசுவே மெய்யான ஒளி!

*ராஜஸ்தான் – கேர்வாடா பணித்தளத்திலுள்ள காக்ரதாரா கிராமத்தைச் சேர்ந்த கமலி ஜீவா 3 1/2 ஆண்டுகளாக பார்வையற்று அவதிப்பட்டு வந்தார். மருத்துவமனைகள், கோவில்கள், மந்திரவாதிகள் என்று அதிகப் பணத்தை செலவழித்தும் எவ்வித பலனும் விளையவில்லை. விசுவாசக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கமலியை நமது ஆலயத்திற்கு அழைத்து வந்தார். ஊழியர் அசோக் அப்பெண்ணிற்கு நற்செய்தி அறிவித்து, ஜெபித்து, ஜெப எண்ணெய்யை அவருக்குப் பூசினார். மறுநாளில் கமலியின் பார்வையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது. அவருக்காய் தொடர்ந்து ஜெபித்ததின் விளைவாக பூரண கண்பார்வையடைந்தார். அவருடைய வாழ்வில் கர்த்தர் நடப்பித்த அற்புதத்திற்காக தேவனைத் துதிப்போம்.*

**18 ஆகஸ்ட்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கீதா கென்னத்
திருமதி. மெல்பின் ரெஜினி சுந்தர்
திரு. அகிலேஷ் குமார்
திருமதி. மேரி நெங்நெய்கிம் கோங்சய்

# அஸோம்

## கோகாமுக்:
## பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** டிஸ்கோபேங்கிங்கும் அவரது மனைவியும் கர்த்தரை ஏற்றுக் கொண்டுத் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். குவார்சக் என்ற புதிய கிராமத்தில் நற்செய்தி அறிவித்ததின் விளைவாக புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். ஒரு வேதாகமமும் 18 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 570 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் இணைய ஆயத்தமாயுள்ள நாராயண் மிலி, அவரது மனைவி திலே மிலி ஆகியோர் பகிரங்கமாகத் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; மதுப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளோர் இப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட; விசுவாசத்திலிருந்துப் பின்வாங்கியுள்ள வில்லியம் மிசாங், ரூப் மோதி மிசாங், பௌர்மாளோடே பெகு, தோரா பெகு, நிஜில் பெகு, ரமி குடும்பம் ரோமசாந்தோ போலெங் மற்றும் அவரது மனைவி தர்மேஸ்வரி போலங் ஆகியோர் விசுவாச வாழ்க்கைக்குள் மீண்டும் வர; கருமுட்டைப் பகுதியில் ஏற்பட்டுள்ளக் கட்டியிலிருந்து பினா பெகு சுகம் பெற ஜெபிப்போம்.

## லோக்ரா: பாருட் பிரதாப் மாங்யா & குமாரி பாரதி

**துதிக்க:** தேவன் எங்களிடம் வழிநடத்தின ஒவ்வொருவருக்கும் கைபிரதிகள் கொடுத்து சுவிசேஷத்தை அறிவித்தோம். தரிகட்டி, ஆராதனா கிராமங்களில் நடந்த உபவாச ஜெபக்கூட்டங்களில் தேவனது கிருபையால் 30 மக்கள் கலந்துகொண்டனர். மூப்பர் கூடுகை லோக்ரா மற்றும் கோஹ்பூர் பணித்தளங்களில் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளின் பிள்ளைகள் பொதுத் தேர்வு எழுதியதுடன் தொடர்ந்து மேல்படிப்பில் வெற்றியுடன் இணைய; சுவிசேஷம் அறிவிக்கப்படும் பொழுது அனைத்து 36 கிராமங்களிலும் மக்களது இருதயத்தை பரிசுத்த ஆவியானவர் திறக்கும்படி ஜெபிப்போம்.

## *மது பரிமாறப்படாத திருமணம்!*

*மத்தியப்பிரதேசம் கர்கோன் பணித்தளத்தில் உள்ள கோகோன் கிராமத்தில் விசுவாசி தினேஷின் திருமணம் நடைபெற்றது. கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் ஒன்று கூடி காவல் நிலையத் திற்குச் சென்று நமது பழக்கவழக்கங்களை (திருமணத்தின் போது மது பரிமாறுவது அவர்களின் வழக்கம்) கிறிஸ்தவர்கள் பின்பற்றுவதில்லை என்று புகார் அளித்தனர். காவல் ஆய்வாளர் அந்த புகாரை ஏற்றுக் கொள்ள வில்லை. "மது அருந்துவதால் ஒருவரையொருவர் தாக்கி கலவரம் ஏற்படு கின்றது. மது பரிமாறப்படாத திருமணங்களில் சமாதானம் நிலவுவதைக் காண்கிறோம். உங்களுடைய புகார் ஏற்றுக்கொள்ளப்பட தக்கதில்லை." என்றுக்கூறி அவர்களுடைய புகாரை நிராகரித்தார், திருமண வீட்டிற்கு காவல் துறையினர் செல்லவுமில்லை. இவ்வாறு புகார் கூறும் பிற குடும்பங்களையும் காவலர்கள் எச்சரித்து அனுப்பினர். விசுவாசியின் வாழ்வில் நடைபெற்ற மாபெரும் அற்புதம் இது. சில மக்கள் விசுவாசியின் குடும்பத்தைப் பாராட்டினர்.*

## 19 ஆகஸ்ட்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குமாரி சூசம்மா ஹரமோகன்

திருமதி. சுஷ்மிதா சமரேந்திர சிங்

### தகுவாகனா: டென்சிங் & கவிதா

**துதிக்க:** மிஷனரிகள் ஊழியத்தால் 15 கிராமங்களைச் சார்ந்த மக்கள் நற்செய்திக்கு ஆவல் காட்டுகின்றனர். போதகர்கள் இல்லாத பிற இயக்க ஆலயங்களில் நமது மிஷனரிகள் பயன்படுத்தப்படுகின்றனர்; அதிக மழையினால் வீடுகளையும் உடைமை களையும் இழந்த விசுவாசிகள் உயிர் பாதுகாக்கப்பட்டனர்; நகார்பாரி, துனாகுரி கிராமங்களில் சிறுவர்களுக்கான வகுப்புகள் நடைப்பெற்றன. தன்னு டைய நோய் குணமாகும்படி ஜெபிக்கக் கேட்டுக்கொண்ட பிந்தீஷ்பாயின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு சுகம் அருளினார், எனவே அவர் மூங்கிலால் ஒரு ஆலயம் கட்டித்தந்துள்ளார்; அந்த ஆலயத்தில் ஆராதனை நடைப்பெறுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழை நிறுத்தப்படவும், வெள்ளத்திலிருந்து மக்கள் பாதுகாக் கப்படவும்; நம்முடைய ஊழியத்துக்கு இடையூறு விளைவிக்கும் உள்ளூர் தலைவர்கள் இந்திரோ சுங்குராம் மற்றும் பிரதீப் பதீயர் ஆகியோர் வாழ்வில் கர்த்தர் இடைப்பட; மந்திரவாதம், பில்லி சூனியம் செய்து அதன் வாயிலாக மக்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ள சந்திர காந்தோ பதியர், ஓரகாந்தோ பாங்கின் மற்றும் தோர்கங் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## சத்தீஸ்கார்

### பையாதன் - 2:

**தாங் சின் லியான் &**
**உங் தியான்சிங்**

**துதிக்க:** 5 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு 50 பேர் நற்செய்திக்குச் செவிமடுத்து விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். 5 வெவ்வேறு இடங்களில் நடைப்பெற்ற இரவுக்கூடுகைகள் கனி தருபவைகளாக அமைந்துள்ளன. மதோ மற்றும் மன்பால் குடும்பங்கள் ஆலய ஆராதனையில் கிரமமாக பங்கேற்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மதுப்பழக்கத்திற்கு அடிமை யாகி மனைவியைத் துன்புறுத்துகின்ற ராஜ்குமாரியின் கணவர் மனந் திரும்ப; மதுப்பழக்கத்திலிருந்து சோக்கு விடுவிக்கப்பட்டு, ஆராதனைகளில் பங்கு பெற; மூல வியாதியிலிருந்து தேவ்குமாரி சுகம் பெற; சிங்கத் ஆராதனைக்குழு அங்கத்தினர்கள் விசுவாசத்தில் வளர்ந்து ஒற்றுமையாகச் செயல்பட; சிறையில் வாடும் விஜய்குமார் விடுவிக்கப்பட; நடைபெறவுள்ள ஊழியங்களும், முகாம் களும் ஆவிக்குரியப் பலன்களைத் தர; இரத்தச்சோகை நோயிலிருந்து புதன்பாய் சுகம் பெற; நற்செய்தி சொல்லப்படுகின்ற இடங்களில் நற்செய்திக்குத் திறந்த வாசல் ஏற்படவும், அதன் விளைவாகப் பல ஆத்துமாக்கள் கிறிஸ்துவண்டை நடத்தப்படவும் ஜெபிப்போம்.

## 20 ஆகஸ்ட் ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. இஸ்ரேல் டேனியல் P.
திரு. இம்மானுவேல் முர்மு
திருமதி. நீருபேன் சோமாபாய்

### பாலி:

**டிட்டிங்பௌ &**
**மலங்மெய் சனாலுங்**

**துதிக்க:** நான்கு கிராமங்களில் 294 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஒரு புதிய ஏற்பாடு பிரதி அளிக்கப்பட்டது. குடும்பங்களுக்கானப் பயிற்சியும் ஆத்தும ஆதாயப் பயிற்சியும் காஞ்சன்பூர் கிராமத்தில் நடத்தப்பட்டன. கோரமார் பகுதியில் புதிய விசுவாசிகளுக்கான பயிற்சி மேற்கொள்ளப்பட்டது மற்றும் வெளிப்புற சத்சங் கூடுகைகள் நடைபெற்றன. கிறிஸ்தவரல்லாதோர் மத்தியில் சாட்சியாக இப்பகுதியில் முதல் திருமணம் விசுவாசிகள் பூர்ணிமா & விஜய் ஆகியோருக்கு நடைப்பெற்றது. புதுமணத் தம்பதியரின் வீட்டுக்குத் தேவையானப் பொருட்களுக்கு, விசுவாசிகள் நன்கொடையாகக் கொடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஷெமிபானி ஜார்னா மற்றும் குங்வஜாதி என்ற புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது; மீண்டுமாக மதுவுக்கு அடிமையாகி மனைவியுடன் சண்டைபோட்டு இரவுக் கூடுகைகள் நடத்தக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்கும் மஜ்வானி கிராமத்தைச் சார்ந்த துலாராம் மனந்திரும்ப; மன்ராக்கன், ஜூரகான், சாபம், சுகுர்வார்சிங், ராஜ்குமார், ஹர்பியாரே, சுந்தர்சன், மாயாராம், சூரஜ், மோகன், துகேஷ் மற்றும் துர்பாதி ஆகியோர் மதுப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட; அமர்பூர் கிராமத்தைச் சார்ந்த கியான் சிங் காசநோயிலிருந்து சுகம் பெற; மோதியா கிராமத்தைச் சார்ந்த தொராஸ்ராம் ஆராதனையில் பங்கு பெற்று தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## ஒடிசா

### ஜஷிப்பூர்:

**சுகின்லால் & ஜெயராணி;**
**அரவிந்த் குமார்**

**துதிக்க:** 20 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். பூர்டி ஆலயம் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. மூன்று கிராமங்களில் விசுவாசிகள் கூடுகை மற்றும் உபவாச ஜெபங்கள் நடைப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொன்டியோடுரா கிராமத்தைச் சேர்ந்த மார்கோன்டோவின் சில ஆரோக்கிய குறைபாடு நீங்க; கிராம மக்கள் மூலம் எதிர்ப்புகளைச் சந்தித்துக்கொண்டிருக்கும் பத்தி ஜோரி மற்றும் ராதாநகர் விசுவாசிகள் உறுதியுடன் நிற்க; புலன் ஜாம்டா தனது மனநோயிலிருந்து சுகம்பெற; ஞாயிறு பள்ளி ஆசிரியர்களின் பயிற்சிக்காகவும், 4 மாணவர்களின் கல்லூரி சேர்க்கை மற்றும் வரவிருக்கும் தேர்வுக்காக ஜெபிப்போம்.

## 21 ஆகஸ்ட் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. எமி ஆனந்தி

### ராய்ரங்பூர்:
### சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** முதியோர் கல்வித்திட்டத்தின் மூலம், விசுவாசிகள் தாங்களாகவே எழுதவும் வாசிக்கவும் தேவன் கிருபைச் செய்தார். சாராகுடி கிராமத்தில் 220 கைப்பிரதிகள் விநியோகிக்கப் பட்டன. டாங்காபானி கிராமத்தில் தொலைந்துப்போன எருது ஜெபத்தின் மூலம் இருநாட்கள் கழித்து கிடைத்தது. மிகவும் ஏழ்மை நிலையிலிருந்த புர்ஜு ஜாம்டா ஒரு மிதிவண்டியும், மின் விசிறியும் வாங்க தேவன் உதவி புரிந்தார். உபவாச ஜெபத்தில் கலந்துக்கொண்ட டுனி ககாராய் முதுகு வலியிலிருந்து சுகம் பெற்றார். பான்டு குலன்டியா குடும்பத்தில் சமாதானம் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஹோ சமஜ் இனமக்கள் மனந்திரும்ப; நமது விசுவாசிக்கு எதிரான நீதிமன்ற வழக்கு விரைவில் முடிவடைய; பெலாபட்டி சிங் பயத்தின் ஆவியிலிருந்து விடுதலைப் பெற; மணி ரபிபாஸ் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; பண்டு குலாண்டியா குடும்பத்தில் சமாதானம் நிலவ; புலாமணி கிஸ்கு குழந்தை பாக்கியம் பெற ஜெபிப்போம்.

### பிஜாடோலா:
### குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்

**துதிக்க:** 14 நபர்கள் கர்த்தரின் மந்தையில் இணைந்தனர். கோபி நாத்பூர் மற்றும் அசந்த் பான் கிராமங்களைச் சேர்ந்த 2 புதிய குடும்பங்கள் ஆலய ஆராதனையில் பங்கேற்கின்றனர். தங்குரு, பலிசுவா, உலிதி, சோட்டோமென்டோல், பயிரபாலி மற்றும் கிசாலி ஆகிய 6 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. சரஸ்வதிநாயக் பெண்குழந்தையால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத் திருக்க; சம்டகுடு கிராமத்தைச் சேர்ந்த சுரைடுடு, கொண்டபானி கிராமத்தைச் சேர்ந்த கரினாசோரேன், பொக்காரியா கிராமத்தைச் சேர்ந்த ஹஷ்டுடு, தரபாதி கிராமத்தைச் சேர்ந்த கிகோ டுடு, அன்லதுபா கிராமத்தைச் சார்ந்த பிரதா மொகாலி, லுசாதியைக் கிராமத்தைச் சேர்ந்த சங்கர், பாக்கியாத் நகர் கிராமத்தைச் சார்ந்த சந்துரு அசன்பானி கிராமத்தைச் சேர்ந்த ராமமக்கி மற்றும் கோபிநாத்பூரைச் சார்ந்த முக்கியா நந்தா ஹெம்ரோம் ஆகியோர் விசுவாசத்தில் உறுதியாக நிற்க, முதியோர் எழுத்தறிவு இயக்கம் சிறப்பாக நடைபெற்று கனி தர ஜெபிப்போம்.

**22 ஆகஸ்ட்**
**செவ்வாய்**

## குஜராத்

### பாவ்நகர்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** மூன்று புதிய நபர்கள் விசுவாசிகளின் கூட்டத்தில் இணைந்துள்ளனர். பிறந்தது முதல் பேச முடியாமலிருந்த 8 வயதான சிறுவன் புலாப்பாய் கர்த்தரின் கிருபையால் பேசத் தொடங்கியுள்ளான். அசுத்தாவியின் பிடியிலிருந்து சம்சுபாயின் குடும்பம் விடுவிக்கப்பட்டுள்ளது. உணவு உட்கொள்ளும்போது தொண்டையில் உணவிலொரு பகுதி சிக்கிக்கொண்டதால் சரிதாபேன் இயேசுகிறிஸ்துவை நோக்கி கூப்பிட்டதின் விளைவாக தொண்டையடைப்பிலிருந்து விடுவிக்கப் பட்டாள். 7 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிறவியிலிருந்து பேச முடியாமலிருக்கும் விசுவாசி தீபக்கின் மகன் கர்த்தரிடத்திலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்ள; ராஜ்குமார், ராஜ்குமாரி மற்றும் சரிதாபேன் ஆகியோர் மழலைபாக்கியத்தால் ஆசீர்வதிக்கப்பட; இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள வினயபாய் கர்த்தரிடத்திலிருந்து சுகம் பெற; நற்செய்திக்கு செவிமடுப்போர் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

### ஜாலோத்: குமார் பால் & அமுதா

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் 185 புதிய நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. விரும்பிக் கேட்டவர்களுக்கு 13 வேதாகமங்கள் அளிக்கப்பட்டன. நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுத்த கர்த்தர் ரஷிதாபேனுக்கு குழந்தை பாக்கியம் கொடுத்தார்; ஐ.பி. மிஷன் பள்ளியில் படிக்கும் நமது விடுதி மாணவன் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றுள்ளான். வக்லத்வா மற்றும் சாங்கன் கிராமங்களில் இரு புதிய குடும்பங்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. நம்முடைய விடுதியைச் சேர்ந்த 5 மாணவியர்கள் 12-ம் வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்; பல்வேறு உபத்திரவங்களின் மத்தியில் ராம்சுபாய் தன் விசுவாசத்தில் உறுதியாக உள்ளார். தற்செயலாக நச்சுப்பாம்பின் மீது கால் வைத்த பர்மிளாபேன் அற்புதமாக காக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12-ம் வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள மாணவன் அரவிந்த், வேதாகம கல்லூரியில் இறையியல் படிப்பு படிப்பதற்கான இடம் கிடைக்க; நமது விசுவாசி காந்தாபேனை நிலத்தகராறினிமித்தம் அடிக்கடி வேண்டாத வார்த்தைகளால் பேசி சண்டையிவோர் மனம் மாற; மன அழுத்தத்தால் அவதிப்படும் ஜோதிபேன் மற்றும் சஞ்ஜைபேன் கர்த்தரிடமிருந்து சுகம் பெற; தங்களுடைய கடன் சுமைகளிலிருந்து ரமேஷ் மற்றும் தினேஷ் விடுவிக்கப்பட; அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து வனிதாபேன் மற்றும் அரவிந்த்பாய் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**23**

**ஆகஸ்ட்**

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமாமுனி J.B.V. பிரசாத்
திரு. வெங்கடேஷ் வடார்
திரு. ஆஷிஷ் குமார்
திருமதி. சுபாசினி முர்மு

## சூரத்:

**ஜெபதங்கம் & மாதவராய்**

**துதிக்க:** புற்றுநோயிலிருந்து சுகம் பெற்ற சூரஜ் ஆலய ஆராதனையில் கர்த்தருடைய நாமம் மகிமைப் படுவதற்கேதுவாக தன்னுடைய சாட்சியைப் பகிர்ந்தான். நிஷாபேன் என்பவரின் வயிற்றிலிருந்தக் கட்டி அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டு, தற்போது குணமடைந்து வருகிறார். கௌதம் நகர் மற்றும் சப்னம் சொசைட்டியில் நடத்தப்பட்ட இரவுநேரக் கூடுகையில் சிலர் மனந்திரும்பி விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். நானபோன்டா பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப் பட்டு, சுகவீனமானவர்களுக்காக ஜெபிக்கக் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியை புதிதாகக் கேட்டவர்கள் விசுவாச வாழ்விற்குள் வர; நிஷாபேன், சுஜித்பாய், சங்கீதாபேன் மற்றும் சுனிதாபேன் ஆகியோர் குழந்தை பாக்கியத்தால் ஆசீர்வதிக்கப்பட; பெஸ்தான் பகுதியில் நமக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டத் தகுந்த இடத்தை கர்த்தர் நமக்கு காண்பிக்க; நமது மிஷனரியை முழங்கால் வலியிலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## உமர்காம்:

**ஆசீர் மோசஸ் &**
**அமிர்தா கோல்டா**

**துதிக்க:** 3 புதிய கிராமங்களில் 220 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 5 விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டனர். 30 புதிய ஏற்பாடுகளும் 12 வேதாகமங்களும் வழங்கப்பட்டன. டெய்லிபாடா பதேர் பலியா மற்றும் கேசர்பாடா கிராமங்களில் வெளிப்புற ஊழியம் செய்யப்பட்டது. பத்தேல்பாடா, ஜெரோலி மற்றும் மந்தா கிராமங்களில் வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போராவ் கிராமத்தில் ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட; கர்த்தருக்குள் நித்திரையடைந்த பிரகாஷ்பாய் மற்றும் மைக்பூர் குடும்ப அங்கத்தினர்களுக்குக் கர்த்தர் சமாதானத்தையும் ஆறுதலையும் அருள; அறுவை சிகிட்சைக்கு ஆயத்தப் படும் தஸ்துபாய் கர்த்தரிடத்திலிருந்து சுகமாக்கும் வல்லமையைப் பெற்றுக் கொள்ள; புற்றுநோயினால் அவதி யுறும் சரஸ்வதி, ஞாபக மறதியினால் கஷ்டப்படும் சவீதாபேன் ஆகியோர் கர்த்தரிடமிருந்து சுகத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

## 24 ஆகஸ்ட் வியாழன்

### ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:

**ஹரிபாபு & பங்கஜம், பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி, பிஜுலால் & ஸ்டெஃபி, டேனியல் ராஜாமணி & சோஃபியா, ரூத், மய்னா, ஏஞ்சல்ராஜ் மற்றும் ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ்**

**துதிக்க:** நீட் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு; புதிய கல்வியாண்டிற்கான பாடபுத்தகங்கள் விநியோகிக்கப்பட்டதற்காக; பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் நடைப்பெற்ற வேலையானது நிறைவுப் பெற்றதற்காக; பெங்களூரு பட்டணத்திலிருந்து பள்ளியில் புதிதாக இணைந்திருக்கும் புதிய ஆலங்கில ஆசிரியருக்காக; சேலம் டேனிஷ்பேட்டை மற்றும் கேரளாவில் நடைப்பெற்ற கூட்டங்களில் சாட்சி பகர்ந்த 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்காக; கிர்ஷா என்ற சிறுகுழந்தை பாம்புக்கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக; புயலின் மத்தியிலும் தேவன் கொடுத்த பாதுகாப்பிற்காக, ஆசிரியர்களுக்கான நோக்குநிலைக் கூட்டம் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12-ம் வகுப்பை முடித்திருக்கும் நமது விடுதிப்பிள்ளைகள் தேவ சித்தத்தின்படி உயர்க்கல்வி பிரிவுகளைத் தெரிந்தெடுக்க; பள்ளி வளாகத்திற்கு தோட்டக்காரர் கிடைக்க; ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு உபயோகமான பள்ளி நூலகத்திற்குத் தேவையானப் புத்தகங்கள் வாங்கப்பட; கலை மற்றும் வர்த்தகவியல் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவும், ஏற்ற ஆசிரியர்கள் கிடைக்கப்பெறவும் ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

### கான்வேல் – ராண்தா விடுதி:

**மர்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** சிறுவர் விடுதியில் நடைபெறும் ஊழியத்தில் பல்வேறு செயல்களின் வழியாக சிறுவர்களின் ஆவிக்குரிய மற்றும் கல்விக்குரிய முன்னேற்றம் உறுதிபடுத்தப்பட்டது. விடுமுறைக்குப்பின் சிறுவர்கள் நல்ல சுகத்துடன் விடுதிக்குத் திரும்பினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய சிறுவர்கள் நமது விடுதியின் ஆவிக்குரிய சூழலுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ள; 10 மற்றும் 12-ம் வகுப்புகளில் தேர்ச்சிப்பெற்ற மாணவர்களின் மேற்படிப்பிற்காக; இந்த விடுதியைச் சார்ந்த சிறுமி திக்ஷிதாபேன் அடிக்கடி சுகவீனப்படுவதால் பள்ளிக்கூடத்திற்குத் தொடர்ச்சியாகச் செல்ல முடியாத நிலையிலிருந்து சுகம் பெற; இந்த சிறுவர் விடுதியிலுள்ளச் சிறுவர்களைப் பல்வேறு நோய்களிலிருந்து கர்த்தர் காப்பாற்றவும், இந்த மையத்தில் தாங்கள் இருக்கும் நோக்கத்தை அறிந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

25
ஆகஸ்ட்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எஸ்தர் ஆபிரகாம்
செல்வி. கிருஷ்ணவேணி D.

**கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** சிறுநீரகக்கல்லினால் இரண்டு ஆண்டுகளாக அவதியுற்ற எலிசா பூரண சுகம் பெற்றார். கால்வலியிலிருந்து சனிபேனு தொடர்ச்சியான சுகவீனத்தி லிருந்து சலோனியும் சுகம் பெற்றனர். விசுவாசிகளின் பெரும்பாலான பிள்ளைகள் 10 & 12-ம் வகுப்பு தேர்வுகளில் வெற்றிப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உதிரப்போக்கால் அவதியுறும் விசுவாசி காவந்திபேன் சுகம் பெற; நீண்டகாலமாக மார்புவலியினால் கஷ்டப்படும் ஈஸ்வர் சுகம் பெற; சாத்தானின் கட்டுகளிலிருந்து பாரதி பேன் மற்றும் மதுபேன் விடுவிக்கப்பட; வயிறு வீக்கத்தினால் உபத்திரவப்படுகின்ற 10 வயது தேஜாபேன் கர்த்தரின் கிருபை யினால் குணமடைய; திருமணமாகி ஐந்து ஆண்டுகளாக குழந்தையில்லாம லிருக்கும் தீபிகாபேன் மழலைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### கட்சாந்தூர்:

**பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்**

**துதிக்க:** 2 கிராமங்களில் 450 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தேடுவோர் முகாமும், 2 விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகளும் நடத்தப்பட்டதற்காக; திவாக்கரின் குழந்தைகள்மீது தேள் ஏறியப்போதும் எந்த ஆபத்துமின்றி தேவன் பாதுகாத்ததற்காக; வித்யா, பூர்ணிமா, நாகராஜ், பிரகாஷ், திவாக்கர், ராமு, கமலம் மற்றும் சொயம் ஆகியோர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி நம் ஜெபக்கூடுகைகளில் பங்குபெற்று வருகின்றனர். தாக்ரே குடும்பம் மற்றும் மதுக்கர் ஆகியோர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகுகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகேஷ், மனோஜ் மற்றும் ராம்ஜி குடும்பத்தினர் தேவ ஊழியத்தை ஆசையோடு செய்ய; சஞ்ஜய், விலாஸ் சோவினல் மற்றும் நிர்மலாவிற்கு ஏற்ற வாழ்க்கைத்துணைகள் கிடைக்க; ஹனுமந்த் பவார், ஹனுமந்த் கெடாம் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற; கோண்டு மற்றும் கொலம் மக்களினத்தின் மத்தியில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

## பணித்தளத்தில் முதல் கனி!

*உத்தரப்பிரதேசம் அஜாம்பூர் பகுதியில் கைம்கஞ்ச் பணித்தளத்தில் யாதவ் மக்கள் மத்தியில் 3 ஆண்டுகள் மிஷனரிகளாக ஊழியம் செய்து வந்தனர். சில ஆத்துமாக் களையாவது கர்த்தரிடம் வழிநடத்த வேண்டும் என்று ஜெபித்து வந்தோம். நோயுற்று, படுக்கையிலிருந்த சுனில் யாதவ் ஜெபத்தின் வாயிலாக சுகம் பெற்று, கிராமத்திற்குத் திரும்பி கர்த்தரைத் தன் சொந்த இரட்சகராக ஏற்று பகிரங்கமாகத் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டார். இப்பணித்தளத்தில் கிடைத்துள்ள முதல் கனிக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.*

**26**
**ஆகஸ்ட்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சிந்து கோரா எட்வின்

## அக்கல்குவா:
### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** ஏழு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் விளைவாக 5 பேர் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். நமது விசுவாசிகளுடன் இணைந்து 4 நாள் உபவாசக் கூடுகை நடத்தவும் விசுவாசிகளின் விசுவாசம் உறுதிப்படவும் கர்த்தர் கிருபைச்செய்தார். 4 கிராமங்களில் சிறுவர் கூடுகைகள் நடத்தப்பட்டன. தேடுவோர் முகாமின் மூலமாக 5 பேர் வெளியரங்கமாக கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டனர். வெளிப்புற ஊழியம் வெற்றிகரமாக நடைப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப் போருக்காக; பக்கவாதத்தினால் பெலவீனப்பட்டுள்ள நர்ஷி அற்புத சுகம் பெற; அம்பிலிபாரி மற்றும் ரத்தம்பாடா கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கான நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## போரடி:
### ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** சபலபாடா மற்றும் கடைபாடா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் விளைவாக 50 பேர் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். வாதி கிராமத்தில் நடைப்பெற்ற இரவுநேர வெளிப்புற கூடுகையில் 180 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. உமர்தா, சமாரியா மற்றும் நவகவ் கிராமங் களைச் சேர்ந்த 60 சிறுவர்கள் ஞாயிறுப்பள்ளி வகுப்புகளில் ஒழுங்காக பங்கேற்கின்றனர். 7 கிராமங்களில் நடைப்பெற்ற சத்சங் கூடுகைகளின் வாயிலாக 248 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சமாரியா, சக்ரிபாடா, புதாக்கி விகிர் மற்றும் போரடி கிராமங்களில் பெண்களுக்கான மாதாந்திரக் கூடுகை ஒழுங்காக நடைப்பெறுகிறது. சமாரியா மற்றும் அம்பதுக் கிராமங்களில் 18 பேர் இயேசுகிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**ஜெபிக்க:** புதாக்கி விகிர் கிராமத்தில் ஓலை குடிசை ஆலயம் கட்டுவதற்காக நமக்கு அனுமதி வழகங்ப்பட்ட போதிலும், ஆலயக்கட்டுமானத்தை எதிர்க்கின்ற சுரேஷ் மற்றும் அப்சிங் மனந்திரும்ப; உம்ராடா கிராம விசுவாசிகள் ஆலயக்கட்டுமானப் பணியில் ஒற்றுமையாக செயல்பட; அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கங்கா விடுவிக்கப்பட; சிக்கிள்செல் அனிமியா நோயினால் அவதியுறும் அஞ்சலி சுகம் பெற; புகையிலைக்கு அடிமை யாகியுள்ள சச்சின் இத்தீயப்பழக்கத் திலிருந்து விடுக்கப்பட ஜெபிப்போம்.

## 27 ஆகஸ்ட் ஞாயிறு

### ஜவஹர்:
**ஸ்ரீனிவாச ராவ் & ராஜ்யலட்சுமி**

**துதிக்க:** 130 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அதில் 30 பேர் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பொக்கர்பாடா கிராமத்தைச் சேர்ந்த லடக்பாய் மனமுவந்து அளித்த நிலத்தில் ஆலயம் கட்டப்பட்டு, கடந்த மாதத்தில் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. தபேலி மற்றும் சிக்கேரா கிராமங்களில் வெளிப்புற ஊழியங்கள் நடைபெற்று மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சிங்லி சமால், லோகர்மால் கிராமங்களில் விசுவாசிகளுக்கான முகாம் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் வயல்களில் விவசாயத்தை மேற்கொண்டுள்ள விசுவாசிகளின் உழைப்பை கர்த்தர் மேன்மைப்படுத்த; லோகர்மால் கிராமத்தில் அதிகளவில் பரவிவரும் டெங்கு நோய் கட்டுப்படுத்தப்பட; நமது சமிதி அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்கும் மற்றவர்களுக்கும் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; போய்சா பணித்தளத்தில் மேற்கொண்டுள்ள ஊழியத்தின் விளைவாக பலர் கிறிஸ்துவண்டை வர; சாம்பர்சேத் கிராமத்தில் ஆராதனை ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

### மொல்கி / நர்மதா:
**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டு மந்திரவாதிகளிடம் சென்றும் பலனின்றி இருந்த லதாபாய் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தின் மூலமாக சுகம் பெற்றார். 2 பேர் கர்த்தரை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர்; சிறுவர்களுக்கான 14 முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றின் வாயிலாக இயேசுகிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டது; ஜீப்பில் பயணித்தபோது கீழே விழுந்த 3 பேர் அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுவின்மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்காக; மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள 5 வயது சிறுவன் சுகம் பெற; மொல்கி ஆராதனைக்குழுவில் பிரிவினைகளை ஏற்படுத்தும் வின்செண்ட் ராஜ் மனந்திரும்ப; வேதம் வாசித்து விசுவாசத்தில் வளர ஆயத்தப்படும் நர்மதா கிராம விசுவாசிகளுக்கு கர்த்தர் ஞானத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.

## கோரமண்டல் விரைவு ரெயில் விபத்தில் அற்புதமான பாதுகாப்பு!

*மிஷனரி திமோத்தேயுவின் மனைவி முத்துச்செல்வியும் அவரது இளைய மகன் ஜோசப்பும் ஜார்க்கண்டிலுள்ள பணித்தளத்திலிருந்து கோரமண்டல் விரைவு ரெயில் மூலமாக சென்னைக்கு வந்து கொண்டிருந்தனர். இவர்கள் பயணித்த இரயில் பெட்டியில் மக்கள் மிகவும் கூட்டமாக இருந்தனர். திடீரென்று ஒரு பெரிய சத்தம் கேட்டு ரெயில் பெட்டி ஒரு பக்கமாக சாய்ந்து நின்றது. ஒருவர் மீது ஒருவராகப் பயணிகள் விழுந்து கொண்டிருந்தனர். கர்த்தரின் மாபெரும் கிருபையால் எவ்வித பாதிப்புமின்றி நாங்கள் பெட்டியை விட்டு வெளியே வந்தோம். நாங்கள் பயணித்த பெட்டி ஒரு கம்பத்தில் சாய்ந்து கொண்டிருந்தது. இந்த விபத்தில் பலர் மரணமடைந்தபோதும் கர்த்தர் எங்கள் உயிரை அற்புதமாகக் காப்பாற்றினார்.*

## 28 ஆகஸ்ட்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எட்வர்ட் ஜெபசிங் J.

திருமதி. வசாவே சுனிதா வெச்யா

### வத்ஃபாலி: பிதுயூத் குமார் சிங், ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** 600 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தரிசன முகாமில் 30 பேர் பங்கு பெற்றனர். விசுவாசத்தில் பின் வாங்கிய ஒருவர் ஆலயத்திற்கு வந்து மீண்டுமாக விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொண்டார். 3 இடங்களில் உபவாச ஜெபக்கூடுகைகள் நடைபெற்றன. சிறுநீரகக்கல்லினால் அவதிப்பட்ட புராபாய் நமது ஜெபத்தின் மூலமாக சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்குச் செவிகொடுத்த 600 பேரில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் கர்த்தரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; 7 ஆண்டுகளாக பக்கவாதத்தினால் அவதிப்படும் பர்சியாபாய் சுகம் பெற; நமது ஜீப் ஊழியம் மூலம் ஆத்தும ஆதாயப்பணி சிறப்பாக நடைபெற; மன அழுத்தத்தினால் தனது குடும்பத்தைக் கவனிக்க இயலாதிருக்கும் சுமித்ராபேன் விரைவில் சுகம் பெற; நற்செய்தியைக் கேட்டும் தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தித் தீர்மானங்கள் எடுக்கமுடியாதவர்களின் வாழ்வில் தேவன் இடைப்பட; மிதமிஞ்சிய மழையினால் பாதிக்கப்பட்டுள்ள விளை நிலங்கள் பயிர்ச் சேதமின்றி பாதுகாக்கப்பட; வத்ஃபாலி திருச்சபை மூப்பர்கள் பொறுப்புடன் செயல்பட ஜெபிப்போம்.

### சாலீஸ்காவ்: திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** 3 கிராமங்களில் 470 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 3 வேதாகமங்களும், 10 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. மராத்தி சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகள் பான்ராடு, நிம்போரா, தாலேகாவ், கேடுகாவ், சோயாகாவ் மற்றும் அமலாடே போன்ற பகுதிகளில் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்பட்டு, ஜெபமும் ஏறெடுக்கப்பட்டதற்காக; இங்கு புதிய தொடர்பாளர்கள் கிடைக்கப் பெற்றதற்காக, ஜகன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப்பெற்று சிறுநீரகக் கோளாறிலிருந்தும் சுகம் பெற்றதற்காக; 2 கிராமங்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி வகுப்புகளில் 40 சிறுவர்கள் பங்குபெற்றனர்; சோபா கண் பிரச்சினையிலிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராமங்களுக்குள் சென்று சிறிய விக்கிரக சிலைகளை விநியோகித்து, ஜெபக்கூட்டங்கள் நடைபெற இடையூறாக இருந்த நானா அகிர், சமதான் சகுலே, சம்லால் ஜாதவ் மற்றும் சஞ்ஜிவ் சோன்வானே ஆகியோர் மனம் மாற; சிறுநீரகக்கல்லினால் பாதிக்கப்பட்டு நடக்கவும் உணவு உண்ணவும் இயலாதிருக்கும் தன்ஜே சுகம் பெறவும், மயக்கம், நெஞ்சுவலியினால் பாதிக்கப்பட்டிருக்கும் மங்கலாபாய் மற்றும் நிர்மலா ஆகியோர் சுகம் பெற; சுரேஷ் பவோர், வால்மீகி, ஷிர்சாத் மற்றும் சுஷிலாபாய் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; விரைவாக ஊழியம் நடைபெற இப்பணித்தளத்திற்கு ஒரு சுதேச ஊழியர் கிடைக்க ஜெபிப்போம்.

**29**
**ஆகஸ்ட்**
**செவ்வாய்**

### சாங்வி:

**வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்**

**துதிக்க:** 4 கிராமங்களில் 150 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 2 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். 2 வேதாகமங்களும், 20 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. அசுத்த ஆவியின் கட்டினால் உடல் முழுவதும் கொப்புளங்களால் பாதிக்கப்பட்டிருந்த ஆஷி பவார் குணம் பெற்றார்; எதிர்ப்பின் காரணமாக நற்செய்தியாளர்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்; ஆயினும் அடுத்த கிராமத்தில் வேறு ஒரு வீட்டைக் கண்டுபிடிக்கக் கர்த்தர் உதவினார்; சாங்வி விடுதியில் 22 மாணவர்கள் புதிதாக இணைந்துள்ளனர். மின்சார தாக்குதலினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து விடுதி மாணவர் அர்ஜித் கர்த்தரால் காப்பாற்றப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாங்வி மாணவர்கள் கர்த்தருக்குள் நன்கு வளர; பக்கவாத நோயிலிருந்து ரமேஷ் சுகம் பெற; மழைக்காலத்தில் விடுதி சிறுவர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

## கர்நாடகா

### ஷிக்காவ்:

**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** 10 கிராமங்களில் 150 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் இருவர் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். நடக்க முடியாத நிலையிலிருந்த தேவேந்த்ரா ஜெபத்தின் வழியே குணம் பெற்று நடக்க ஆரம்பித்துள்ளார். எதிர்மறையான சூழ்நிலைகள் மத்தியிலும் கல்லூரியில் சேர்ந்து படிக்க மகேஷ் கர்த்தரால் கிருபை பெற்றுள்ளார். ரெயில் பயணத்தின் போது கமலம் மாவை தவறான நபரிடமிருந்து கர்த்தர் காப்பாற்றினார். கடுமையான வாந்தியினால் அவதிப்பட்ட 10 வயது ரஞ்சிதா, ஜெபத்துடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஞ்சுளா, சுஜாதா, லட்சுமி, மங்களா மற்றும் கங்காதர் ஆகியோர் தங்கள் வீடுகளைக் கட்டி முடியக்க; பெற்றோரில்லாமல் இருக்கும் ஆகாஷ், அர்பிதா மற்றும் ஆஷீ தங்கள் வாழ்வில் சமாதானத்தைக் கண்டடைய; சமீபத்தில் திருமணமாகி நேர்மையற்ற கணவனால் அவதியுறும் வித்யாவின் வாழ்வில் தேவன் குறுக்கிடவும், அவரது கணவர் மனமாற்றமடையவும்; மஞ்சு & சுனந்தா மகிழ்ச்சியான திருமண வாழ்வு வாழ; கர்ப்பப்பை அறுவை சிகிட்சை செய்துள்ள ரேகா விரைவில் குணமடைய ஜெபிப்போம்

**30 ஆகஸ்ட்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** இரு சிறுவர்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயுள்ளனர். புதிதாக சந்திக்கப்பட்ட மக்களுக்கு மராத்திய மொழியில் 60 புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. பீனாவின் சிறுநீரகக்கல் அறுவை சிகிட்சையின் மூலம் அகற்றப்பட வேண்டும் என்று மருத்துவர்கள்கூறியும், ஜெபத்தினால் மட்டுமே சுகமடைவேன் என்று உறுதி யாக இருந்து, சுகம் பெற்றார். பீனாவின் மைத்துனர் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற்றார். கானாப்பூர் ஆலயவளாகத்தில் சுகாதாரமான முறையில் கழிவுநீர் கால் வாய் அமைக்க கானாப்பூர் மாநகராட்சிப்ந பணியை ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மந்தையில் இணைய ஆயத்தமாயிருக்கும் புதிய விசுவாசிகள் கர்த்தருக்குள் விசுவாச வாழ்வில் உறுதிப்பட; விபத்தில் கணவரை இழந்து கிறிஸ்துவ முறைப்படி அடக்கம் செய்யவிடாமல் தடுக்கும் கிராமத்தின் சூழலில், இறந்துபோன நமது விசுவாசியின் மனைவி மற்றும் குடும்பத்தினர் ஆறுதல் பெற; திருமண வாழ்வில் பிரச்சினைகளைச் சந்தித்துள்ள பசவாஜ் குடும்பத்தில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### தாமலச்செருவு:

### ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி, அனில் மஹாலி & பிரஷாந்தி

**துதிக்க:** கோத்தூர், வானுநூதனப்பள்ளி மற்றும் கொடுகுசிந்தா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஒலி & ஒளி நிகழ்வின் வாயிலாக கோப்பள்ளி கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. நான்கு கிராமங்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி வகுப்புகள் நடைபெற்றன. பாலூர் கிராமத்தில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் 120 பெண்கள் பங்கேற்று கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றனர். பியூலாவின் தாலி தொலைந்து போன நிலையில் அவர், ஜெபித்துத் தேடியபோது தாலியைப் பெற்றுக்கொண்டார். இரகசியக் கிறிஸ்தவராக இருக்கும் கிராம மந்திரவாதி யின் மகள் லாவண்யா தன்னுடைய பாட்டி ஜெயம்மாவைக் கர்த்தருக்குள்ளாக நடத்தினார்; இதன் விளைவாக ஜெயம்மா கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிட்டு ஆலய வழிபாட்டில் பங்கேற்கிறார். தானியேலின் கன்றுக்குட்டி மீது கார்மோதி மரணத்தருவாயிலிருந்தபோது மிஷனரி ஜெபித்ததின் விளைவாக கன்று எழுந்து, துள்ளி ஓடியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியைக் கேட்டு கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் பகிரங்க மாகத் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; பணித்தளத்திலுள்ள ஏழு ஆலயங்களின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஏழு தன்னார் வலர்கள் முன்வர; சர்வே பணியைச் செய்யவோருக்கும், சுற்றுச் சுவர் கட்டு வோருக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் ஜெயச்சந்திர ரெட்டி, பார்த்தசாரதி மற்றும் ரவி ஆகியோர் மனந்திரும்ப; பெருமாள் குடிகுல்லி கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நரேஷ், தேவேந்திரன், ராமு மல்லிகா, அர்ஜுனன் மற்றும் செங்கல் நாயுடு ஆகியோர் கர்த்தரின் அன்பால் தொடப்பட; ஒய்.எஸ். கேட் பகுதியில் நிறுத்தப்பட்ட ஆலய வழிபாடு மீண்டும் ஆரம்பிக்கப்பட; தலையில் அறுவை சிகிட்சை செய்து 40 நாட்களாக நினைவற்ற நிலையில் இருக்கும் மது சுகம் பெறவும்; இருதயப்பிரச்சினையிலிருந்து மேரி ரமணம்மா சுகம் பெறவும் ஜெபிப்போம்.

**31 ஆகஸ்ட் வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிறிஸ்டோபர் P.G.
திரு. பாலாஜி ஏசுதாஸன் G.

## தமிழ்நாடு

### செங்கம்:

**கே.எஸ். ஜாஷ்வா**

**துதிக்க:** 5 இடங்களில் திருச்சபை மூப்பர்களுக்கான பயிற்சி வெற்றிகரமாக நடைப்பெற்றது. சாத்தனூர் மற்றும் வேடப்பட்டி கிராமங்களில் உபவாச ஜெபக்கூடுகைகள் நடைப்பெற்றன. அனைத்து சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் மத்தியில் ஓய்வுநாள் ஆசிரியர்களுக்கான பயிற்சி நடைப் பெற்றது. சாமல்பட்டி மற்றும் சாத்தனூர் கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நடைப்பெற்றன. இப்பகுதி யில் செயல்பட்டுவருகின்ற 32 திருச்சபைகளுக்கான 5 சேகர மையங்கள் உருவாக்கப்பட்டதின் விளைவாக அநேக ஆத்துமாக்கள் கர்த்தரண்டை வரவிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நடைப் பெறுகின்ற திருச்சபை மூப்பகளுக்கான பயிற்சி தொடர்ந்து நடைப்பெறவும்; இதில் பங்குபெறுவோர் அர்ப்பணிப்புடன் ஒழுங்காகப் பங்குபெறவும்; நமது சுதேச ஊழியரான வின்செண்ட் சம்பத் இவ்வுலகை விட்டு விண்ணுலகம் எய்தினார். அவருடைய மகன்களும் குடும்பத்தினரும் கர்த்தரில் ஆறுதல் பெற; நான்கு நற்செய்தி ஊழியர் களுக்கு நடத்தப்பட்ட TAFTEE வகுப்புகளின் வாயிலாக அவர்கள் தலைமைத்துவத்திலும் கிறிஸ்துவிலும் அதிகமாக வளர; நமது விசுவாசிகளான ஜெயந்திராணி சங்கரையா மற்றும் சுந்தரேசன் ஆகியோரின் வீடு கட்டு மானத்திற்கான நிதித்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

### மிச்சேரி:

**தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி**

**துதிக்க:** ஜூரனூர் கிராமத்தில் 20 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சாவித்திரி, கிருஷ்ணா, சின்னராஜ், கண்ணையன், ஜெயலட்சுமி மற்றும் பவித்ரா ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டி, இயேசுவின் மீதுள்ள விசுவாச வாழ்க்கையில் முன்னேறி வருகின்றனர்; சாவித்திரிக்கு கிராம அலுவலகத்தில் வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியில் ஆர்வம் காட்டுவோர் இயேசுவை ஏற்றுக்கொண்டு, பகிரங்கமாக அறிக்கையிட; கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; சிறுநீரகப்பிரச்சினை யிலிருந்து மோகன் சுகம் பெற; விக்கிரக வழிபாடுகளிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட; விமல்ராஜ் மற்றும் வித்யாலி ஆகியோர் கர்த்தருக்குப் பயப்படுகின்ற வாழ்க்கை துணைவி யரைக் கண்டுகொள்ள ஜெபிப்போம்.

போ (அ) அனுப்பு

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# கர்நாடக மாநில முகாம் 2023

இடம்

**இந்தியா கேம்பஸ் க்ரூசேட் ஃபார் கிரைஸ்ட்**

எண்ணூர் ரோடு, லிங்கராஜபுரம், பெங்களூர் – 560 084.

## செப்டம்பர் 16-18

**சனி** - காலை 8.00 முதல்

**திங்கள்** - மாலை 4.30 மணிவரை

**கருப்பொருள்** நான் உன்னைத் தெரிந்துகொண்டேன். (ஆகாய் 2:23)

## சிறப்புச் செய்தியாளர்கள்



**சகோ. C. ரெஜினால்டு**
தலைவர், FMPB



**அருட்திரு. Dr. குரூஸ் திவாகரன்**
த. போதகர் ஸ்தாபகர்
நியூ லைஃப் இன் ஜீசஸ் ஊழியங்கள்



**அருட்திரு. சில்வான் சந்திரகுமார்**
ஆயர்
சிஎஸ்ஐ-கெசிடி



**அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்**
செயலர், தமிழ்நாடு வ. மண்டலம்
FMPB



**அருட்திரு. I.K. ஆபிரகாம்**
மு. பொது செயலர்
FMPB



**சகோ. பிரைட்டன் அன்பு**
து. இயக்குனர், ஆப்பரேஷன்ஸ்,
வாலிபர் & குடும்ப ஆலோசகர், UIM

## முகாமின் நோக்கங்கள்

- பங்கேற்பாளர்களை ஆழ்ந்த ஆவிக்குரிய அனுபவத்திற்கு கொண்டுசென்று அவர்களை கிறிஸ்துவின் வலுவான சாட்சியாக்குதல்.
- கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு, குறிப்பாக கர்நாடக மாநிலம் முழுவதுமுள்ள கன்னட விசுவாசி களுக்கு மிஷனரி பாரத்தை வழங்குதல்.
- ஏற்கனவே ஊழியங்களில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ககளை ஆழமான ஈடுபாட்டிற்கு ஊக்கமளித்தல்.

Contact: **FMPB - KARNATAKA SNEHALAYA** # 173, 4th Cross, Chikkanappa Layout, Byrathi, Kothanur, Bangalore - 560 077.
☎ : **Rev. Vijay** - 6385187552, **Bro. Elango** - 9902288750, **Rev. Edwin** - 8292390481, **Bro. Raja** - 9036671342, **Rev. Robert** - 9654373422, **Bro. Anand Kumar** - 9686436937, **E-mail:** elangovan@fmpb.org

**ஜெபியுங்கள், பங்குபெறுங்கள் & ஆசீர் பெறுங்கள்**

Regd. Newspaper for India No.17759/69

Go or Send

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

# தேசிய உபவாச ஜெபம் 2023

## ஆகஸ்டு 11 - 13 தேதிகளில்



**பணித்தள மையங்கள், பிராந்திய விரிவுப்பணி மையங்கள் மற்றும் இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் வருடாந்திர உபவாச ஜெபத்தில் பங்கேற்று, உபவாசித்து ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம். தேசத்தின் க்ஷேமத்திற்காய், திருச்சபை எழுப்புதலுக்காய், தேவ சமூகத்தில், தேவப் பிள்ளைகளாய் திறப்பிலே நின்று ஜெபிக்க வாருங்கள்.**

**குறிப்பு:**

ஜெபம் நடைபெறும் இடங்களை அறிய உங்கள் பகுதி விரிவுப் பணி ஊழியர்களை, தலைவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

*ஜெபப் பிரிவு.*

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***